வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 05.04.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 96 பக்கங்கள் : 12

# தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஜே.வி.பியை ஆதரிக்கவேண்டும்

## யாழ்ப்பாணத்தில் அநுரகுமார வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஏப்ரல் 05

"வடக்கு -கிழக்கு மக்களின் ஆணை இல்லாத ஆட்சி நாட்டை முன்னேற்றாது. ஆகையனால் அனைத்து மக்களின் ஆணையுடனான ஆட்சி அமையப் பெறவேண்டும். அவ்வாறு இன, மத பேதமில்லாத ஆட்சி அமைய வேண் டுமானால் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் எமக்கான ஆதரவை வழங்க வேண்டும்." -இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்- நாட்டின் முன்னேற்றம் இன, மதம், மொழி கடந்து ஒற்றுமை யுடன் இணைந்து செல்லும் போதே மேலும் மேலும் நாட்டை முன் னேற்ற முடியும்.

எனவே வடக்கு -கிழக்கில் வாழும் சகோதரர்களின் ஆணையில்லாமல் நாட்டை முன்னேற்ற முடியாது. இதுவே காலம் காலமாக நடந்து வந்த நிலையில் இம்முறை அனைவரதும் ஆதரவை பெற்ற ஆட்சியை அமைக்க வேண்டும்.

ஆகையால் அனைவரது முன்னேற்றத் திற்கும் எமக்கான

11

# இந்திய மின் நிலையத்துக்கு அனலைதீவில் நேற்று அடிக்கல்

யாழ்ப்பாணம், ஏப். 05

அனலைதீவு பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப் படவுள்ள சூரிய கலங்கள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இலங்கை-இந்திய அரசுகள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்திய தனியார் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்நிலையில் இந்திய நிறுவனத்தின் மின் பொறியியலாளர் தினேஷ் பாண்டியன் முன்னிலையில் நேற்று அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. (அ)

# இந்து மக்களின் சார்பில் பொது வேட்பாளராக மனோ

## மறவன்புலவு சச்சிதானந்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 05

இந்துக்கள் மனோ கணேசனைப் பொது வேட்பாளராகத் தேர்ந்தெடுத்து அவருக்கு ஒருமித்து வாக்களிக்க வேண்டும் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு க. சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்- இலங்கையில் இந்துக்கள் இனமாக வாழ்வது வினாக்குறி ஆகி வருகிறது.

புத்தர்கள் ஒருபுறம், முகமதியர்கள் மறுபுறம்,

11

# தாக்குதலுக்கு சென்ற வன்முறை குழுவை மடக்கிப் பிடித்த ஊர்காவற்துறை மக்கள்!

யாழ்ப்பாணம், ஏப். 05

ஊர்காவற்துறை - மெலிஞ்சிமுனை பகுதியில் நேற்றுத் தாக்குதல் நடத்துவதற்கு சென்ற வன்முறைக் கும்பல் ஒன்றை ஊர் மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற 2012ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்கள் வட்ஸ்அப் பில் குழுவாக செயல் பட்டு வந்தனர்.

இந்நிலையில் அந்த குழுவில் இருந்த, இருவருக்கிடையே முரண்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில், முரண்பாட்டில் ஈடுபட்ட ஒருவரை தாக்குவதற்காக இன்னொருவர் ஊருக்கு வெளியில் இருந்து வன்முறைக் கும்பல் ஒன்றினை வரவழைத்துள்ளார்.

அந்தவகையில் ஆயுதங்களுடன் வந்த வன்முறைக் கும்பல்

11

# இந்திய மீனவருக்கு 6 மாதங்கள் சிறை!

யாழ்ப்பாணம், ஏப். 05

இலங்கை கடற்பரப் பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த மற்றுமொரு இந்திய மீனவருக்கு நேற்று சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நெடுந்தீவு கடற்பரப் பில் கடந்த மாதம் 21ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 25 மீனவர்களும் யாழ். ஊர் காவற்துறை நீதிமன்றில், நீதிவான் ஜெ. கஜநிதி பாலன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப் பட்டனர்.

இதன்போது, 24 மீனவர்கள் 5 வருடங் களுக்கு ஒத்திவைக்கப் பட்ட 18 மாதங்கள் சிறைத் தண்டனை என்ற நிபந்தனையுடன்

11

# கட்சிகளை உடைக்கும் நிலைப்பாட்டில் ரணில்!

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 05

கட்சிகளை உடைப்பதற்கான எதிர்பார்ப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்ற தேர்தலும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற அறிவிப்பை அரசாங்கம் விடுத்திருக்கின்றது. இது பெரும்பாலும் பேசப்படுகின்ற விடயமாக இருந்தாலும் இதில் நன்மையும் இருக்கின்றது தீமையும் இருக்கின்றது

11

# பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்கள் ஒரே நாளில் நடத்த பெரமுன ஆதரவு!

கொழும்பு, ஏப். 05

ஜனாதிபதித் தேர்தலும் பொதுத்தேர்தலும் ஒரே நாளில் நடத்தப்பட்டால் அது சிறப்பாக அமையும். செலவுகளையும் கட்டுப்படுத்தலாம் என்று பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன கூறியவை வருமாறு-

இவ்வருடம் ஜனாதிபதி, பொதுத்தேர்தல்கள் என்பன நடத்தப்படும். இந்த இரு தேர்தல்களையும் முடிந்தால் ஒரே

11

# சஜித் தரப்பினரின் கூட்டு இன்று அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஏப். 05

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையிலான புதிய அரசியல் கூட்டணி இன்று முற்பகல் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் உள்ளிட்ட குழுவினர் இன்று புதிய அரசியல் கூட்டணியில் இணைவதற்கான ஒப்பந்தத்தில்

# பகலில் நடு வீதியில் வைத்து குடும்பஸ்தர் குத்திக்கொலை!

கிளிநொச்சி, ஏப். 05

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில், நடு வீதியில் வைத்து, குடும்பஸ்தர் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டார். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

பிரமந்தனாறு பகுதி பாடசாலையில், நேற்று பிற்பகல் விளையாட்டு போட்டி நடைபெற ஏற்பாடாகி இருந்த நிலையில், பாடசாலையில் வைத்து, இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட

11

# தூண் விழுந்து மாணவன் பலி!

கொழும்பு, ஏப். 05

மஸ்கெலியா, காட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் கொங்கிறீட் தூண் சரிந்து விழுந்ததில் அதில் சிக்குண்டு மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

11

# வவுனியா செயலக சித்திரை கலை விழாவில் தோன்றிய வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர்!




வவுனியா, ஏப். 05

வவுனியாவில் இடம் பெற்ற சித்திரை கலை விழாவில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் காட்சிப்படுத்தப் பட்டது.

வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் நகரசபை மைதானத்தில் சித்திரை கலை

11

# இப்படியும் நடக்கிறது

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்துவிட்டு விடுதலையான பின்னரும் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று ஈழத்தமிழர்கள் பற்றி சில வாரங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் எழுதியது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

அந்த வழக்கில் தண்டனை பெற்ற இந்தியர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் தங்கள் தங்கள் குடும்பங்களுடன் இணைந்து விட்ட போதிலும் ஈழத்தமிழர்கள் நால்வர் மட்டுமே சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் அண்மையில் மரணித்த சாந்தன் மட்டுமே தாயகம் திரும்ப விரும்பியபோதிலும் மற்றைய மூவரும் இலங்கை திரும்பாமலே வெளிநாடுகளுக்கு புலம்பெயரவே விரும்பினர். இந்தியாவில் இருக்கும் வெளிநாட்டவர் ஒருவர், அவ்வாறு வெளியேறுவதெனில் அவரது சொந்த நாட்டுக்கு செல்லவே இந்தியச் சட்டம் அனுமதிக்கும் என்பதால் அவர்கள் மூவரும் இந்தியாவிலிருந்து வெளியேறுவது தாமதமாகியது.

சாந்தனின் விடயத்தில் நமது தலைவர்கள் என்போர் உரிய நடவடிக்கையை உரிய முறையில் செய்திருந்தால், சாந்தன் நிச்சயமாக சில நாட்களாவது தனது தாயாருடன் மகிழ்ச்சியாக கழித்திருப்பார். ஆனால், அது நடக்கவில்லை. இனி அதனைப் பற்றி எழுதுவதும் பயனற்றது. அதனால்தான் மற்றையவர்களை எப்படி இந்தியாவில் சிறப்பு முகாம்களில் இருந்து வெளியே கொண்டுவரலாம் என்பது பற்றியே இந்த பத்தியில் சில ஆலோசனைகளை எழுதியிருந்தோம். அது தொடர்பாக இந்தியாவில் பாஸ்போர்ட் அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற மூத்த அதிகாரியிடமும் இந்த ஊர்க்குருவி பேசியிருந்ததுடன் அவரது ஆலோசனையையும் எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு, ஊர்க்குருவியுடன் பேசிய ஒருவர், அதுபற்றிய தகவல்களை மேலதிகமாகவும் தெரிந்துகொண்டதுடன், இந்த ஊர்க்குருவி ஆலோசனை பெற்ற அந்த இந்திய அதிகாரியின் தொடர்பு விபரங்களையும் பெற்றிருந்தார்.

சிறப்பு முகாமில் இருந்த முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும் விடுதலையாகி நேற்று முன்தினம் கொழும்பு வந்தடைந்த செய்தியை அறிந்த அந்த இந்திய அதிகாரி தொலைபேசியில் தொடர்பில் வந்தார். அவரது மகிழ்ச்சிக்கு எல்லை இருக்கவில்லை. அவர்கள் மூவரின் விடுதலையில் தானும் ஏதோ ஒருவகையில் பங்களித்திருப்பது தனக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கின்றது என்றார் அந்த அதிகாரி. அதன் பின்னர் தான் என்னோடு கதைத்து அவரின் விபரங்களைப் பெற்ற அந்த நண்பர், அவர்களின் விடுதலைக்காக, அதாவது இலங்கை தூதரகத்தில் அவர்கள் தமது பாஸ்போர்ட்டைப் பெறுவதற்காக இலங்கையில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசியிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

மிக அமைதியாகவே அந்த மூவரின் விடுதலை துரிதமாக நடக்க அவர் வெளியே யாருக்கும் சொல்லாமலே முயற்சி செய்திருக்கிறார் என்பது தெரியவந்தது.

மூவரும் விடுதலையாகி சென்னையிலிருந்து விமானத்தில் வருகின்ற செய்தி அறிந்ததும் நமது அரசியல்வாதிகள் சிலர் விமான நிலையத்தில் காவல் இருந்தனர். ஆனால், அவரோ அவர்கள் வருகின்றபோது எதுவித சிரமமும் இன்றி வெளியே வருவதற்காக ஒரு முக்கிய பிரமுகரின் வீட்டிலிருந்து விமான நிலைய அதிகாரிகளுடன் பேசியிருக்கிறார்.

ஆனால், வழமையான சம்பிரதாயங்கள் முடிந்து வெளியே வரும்வரை விமான நிலையத்தில் காவல் இருந்தவர்கள், ஏதோ தாங்கள்தான் அவர்களின் விடுதலைக்காக விமான நிலையத்தில் கடுமையாக போராடிக் கொண்டிருப்பதாக அவ்வப்போது சமூகவலைத்தளங்களில் பதிவிட்டுக் கொண்டிருந்தனர்.

சில நாட்களுக்கு முன்னர், தமிழகத்தில் அகதியாக வாழ்ந்த இந்த ஊர்க்குருவியின் உறவினர் ஒருவர் சுமார் இருபத்தி ஐந்து ஆண்டுகள் தமிழக அகதி வாழ்க்கையின் பின்னர் தாயகம் திரும்பியிருந்தார்.

இங்கிருந்து இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வீசா பெற்று சென்னை சென்ற அவர், அங்கே அகதியாக வாழ்ந்துவிட்டு திரும்பிய போது வீசா இல்லாமல் தங்கியிருந்ததற்கான அபராதத் தொகையையும் கட்டிவிட்டு திரும்பியிருந்தபோதிலும் நண்பகல் விமான நிலையத்தில் வந்துசேர்ந்த அவர் இலங்கை அதிகாரிகளின் விசாரணைகள், சம்பிரதாயங்களை முடித்துக் கொண்டு வெளியே வர இரவு பத்து மணியையும் கடந்திருந்தது.

ஆனால், நேற்று முன்தினம் வந்தவர்களோ அதற்கு முன்னரே வெளியே வந்துவிட்டனர்.

அதற்குள் எமது முகநூல் போராளிகள் துள்ளிக்குதிக்கத் தவறவில்லை.

இனி என்ன அவர்களை வைத்து நம்மவர்கள் சில நாட்களுக்கு அரசியல் செய்வார்கள்.!

**- ஊர்க்குருவி.**

# மாணவரை ஆசிரியர் துன்புறுத்துவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை

யாழ்ப்பாணம், ஏப். 05

பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களை அடித்து துன்புறுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என வட மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்கள் மீது தண்டனை என்ற பெயரில் துன்புறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

குறித்த அறிவித்தலில்,

கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களை வளப்படுத்த வேண்டிய ஆசிரியர்களே, மாணவர்களை அடித்து, துன்புறுத்தி வைத்தியசாலைகளில் அனுமதிக்கும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன.

கடந்த சில மாதங்களுக்குள் இவ்வாறாக செயற்பட்ட ஆசிரியர்கள் தொடர்பில், ஆளுநர் செயலகத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பதிவான மூன்று சம்பவங்கள் தொடர்பில் ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

“எழுத்தறிவித்தவன் இறைவன்” எனும் கூற்றுக்கு அமைய, இறைவனாக போற்றப் படக்கூடிய ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் துன்பம் இழைப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது.

கற்றலில் சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவர்களை எவ்வாறு கற்றலில் ஈடுபடச் செய்வது என்ற யுக்தியை கண்டறிந்து அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஐ. நா. அமைதி காக்கும் பணிக்காக இலங்கையின் 15ஆவது குழு பயணம்!




கொழும்பு, ஏப். 05

லெபனான் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையின் தலைமையகத்தின் அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை இராணுவத்தின் 15 ஆவது பாதுகாப்பு படை குழு நேற்று முன் தினம் லெபனான் புறப்பட்டது.

அக்குழுவில் பல இராணுவ படையணிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 அதிகாரிகள் மற்றும் 114 சிப்பாய்கள் என 125 இராணுவ வீரர்கள் 114 உள்ளடங்குவர்.

குழுவின் கட்டளை அதிகாரியாக லெப். கேணல் டி.கே. டி. விதானகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதியை பிரதிநிதித்துவப்படுத்தி மத்திய பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதியும் விஜயபாகு காலாட் படை யணியின் படைத் தளபதி யுமான மேஜர் ஜெனரல் ரோஹித அலுவிஹாரே, 14 ஆவது காலாட் படைபிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் நளீன் பண்டாரநாயக்க மற்றும் இராணுவ போக்குவரத்து நிர்வாக பணிப்பாளர் நாயகம், மேஜர் ஜெனரல் அனில் பெரேரா, சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குழுவை வழியனுப்பினர். (அ)

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அமைச்சர் டக்ளஸ்டன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஏப். 05

யாழ்.மாவட்டத்தை சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.


இச்சந்திப் பின்போது யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி திணைக்களத்தை வினைத்திறனாக கொண்டு நடத்துவது தொடர்பிலும் மக்களுக்கு தேவையான சேவைகளை தடையின்றி வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அபிவிருத்திச் சங்கத்தை மீள புனரமைக்குமாறு உத்தியோகத்தர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந் நிலையில் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதற்கான உபகுழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சமுர்த்தித் திணைக்கள பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட பதில் பதில் மாவட்ட செயலாளர் ம. பிரதீபன் மற்றும் சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறு மே மாதத்தில் வெளியாகும்!




கொழும்பு, ஏப். 05

2023 க.பொ.த உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளை எதிர்வரும் மே மாத ஆரம்பத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளை இவ்வருடம் மே மாத நடுப்பகுதியில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

குறித்த பரீட்சைக்கான கால அட்டவணை ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
05.04.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பொதுவேட்பாளர்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்கும் விவகாரம் நாளுக்குநாள் அதிகம் பேசப்படும் விடயமாக மாறிவருகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் அவ்வாறான வேட்பாளராக வருவதற்கு யாருக்கு தகுதியுண்டு - அது யாராக இருக்க வேண்டுமென்றவாறான அபிப்பிராயங்களும் முன்வைக் கப்படுகின்றன.

தமிழ் பொது வேட்பாளராக யார் வரவேண்டும் என்பது தொடர்பில் பேசுவதற்கான தருணம் இதுவல்ல என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். முதலில் இந்த விடயத்தில் கொள்கை அடிப்ப டையில் அனைத்துக் கட்சிகளும் ஓரணியாக வேண்டும். அதற்கான முயற்சியையே "மக்கள் மனு" - வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழு முன்னெடுத்திருந்தது. மக்கள் மனு - வடக்கு, கிழக்கு சிவில் சமூகமே இந்த விடயத்திற்கு தலைமை தாங்கிவருகின்றது. எனவே, இந்த நிலையில் தன்னிச்சையான கருத்துகள் பொருத்தமற்றவை.

முதலில் இந்த விவகாரத்தில் அனைத்துக் கட்சிகளும் கொள்கை அடிப்படையில் இணக்கத்தைத் தெரிவித்து, அதனை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதன் பின்னர் யாரை வேட்பாளராக நிறுத்தலாம் என்பது பற்றி அனைவருமே இணக்கத்தை எட்டலாம். தமிழ் பொது வேட்பாளராக நிறுத்தப்படுபவர் எவ்வாறான தகுதி நிலைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்னும் விடயமும் மக்கள் மனு - வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழு ஏற்பாடு செய்திருந்த முதலாவது மக்கள் சந்திப்பின்போது, கலந்துகொண்டிருந்த புத்திஜீவிகளால் முன்வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறான வேட்பாளர் அரசியல் கட்சி சாராதவராகவும் மதப் பின்னணி இல்லாதவராகவும் இருக்க வேண்டும் - அத்துடன், மக்கள் மத்தியில் செல்லக்கூடிய தகுதி நிலையோடும் அவர் இருக்க வேண்டும்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய பிரதான கட்சிகள் கொள்கை அடிப்படையில் உறுதியான நிலைப்பாட்டை இதுவரையில் தெரிவிக்க வில்லை. இதேவேளை, சம்பந்தன் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிக்கவில்லை என்று கூறியதாகவும் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அது சம்பந்தனின் தனிப்பட்ட கருத்தாகவும் இருக்கலாம். ஆனால், இது ஒரு சம்பந்தன் தீர்மானிக்கும் விடயமல்ல. ஏனெனில், சம்பந்தன் இதுவரையில் மேற்கொண்ட அனைத்து அரசியல் தீர்மானங்களும் தோல்வியடைந்திருக்கின்ற நிலையில், சம்பந்தனின் தனிப்பட்ட விருப்பங்கள் தமிழ் மக்களுக்கு அவசியமற்றது. ஆனால், தமிழ் அரசு கட்சி அதன் உறுதியான தீர்மானத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆனால், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை கண்டு தமிழ் கட்சிகள் அஞ்சுவதாகவும் தெரிகின்றது. ஏனெனில், தமிழ் மக்கள் மத்தியில் ஒரு எழுச்சி உருவாகிவிட்டால் அதன் பின்னர் கட்சிகளால் அதற்கு மாறாக செயல் படவும் முடியாது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் பொது வேட்பாளர் யார்? - என்னும் சர்ச்சைகளை ஏற்படுத்தி, இந்த விடயத்தை திசைதிருப்பு வதற்கான முயற்சிகளும் இடம்பெறக்கூடும். எனவே வேட்பாளர் யார் என்பதை பின்னர் பார்க்கலாம் முதலில் அனைத்து கட்சிகளும், தமிழ்த் தேசிய அரசியலில் அக்கறை கொண்டு செயல்படும், அனைத்து புத்திஜீவிகளும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களும் இந்த விடயத்தில் கொள்கை நிலைப்பட்ட உடன்பாட்டுக்கு வரவேண்டியதே முதல் கட்டமாகும். இதன் பின்னர் எவ்வாறான விடயங்களை முன்வைப்பது யாரை முன்னிறுத்துவது என்பவற்றை பற்றி உரையாடலாம்.

# கச்சதீவு குறித்து மீளவும் பேசவேண்டியதில்லை!

## கூறுகிறார் அலி சப்ரி

*கொழும்பு, ஏப். 05*

*50 வருடங்களுக்கு முன்னர் இந்தியா கையளித்த சர்ச்சைக்குரிய கச்சதீவு குறித்து புதிய பேச்சுகள் எவற்றையும் ஆரம்பிக்க வேண்டிய தேவை உள்ளதாக இலங்கை கருதவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.*

*இந்திய தேர்தல் களத்தில் கச்சதீவு விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையிலேயே அவர் இதனை கூறினார்.*

*1976ஆம் ஆண்டு இரண்டு அயல்நாடுகளும் கச்சதீவு குறித்து செய்து கொண்ட உடன்படிக்கையை தேர்தலில் மீண்டும் வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்படும் நரேந்திர மோடி தேர்தல் விவகாரமாக்கியுள்ளார்.*

*இந்த பிரச்னை 50 வருடங்களுக்கு முன்னரே பேசப்பட்டு தீர்வு காணப் பட்டுள்ளது. இதனால், மீண்டும் இது குறித்து பேசவேண்டிய அவசியமில்லை என அலி சப்ரி கூறினார்.*

*பேச்சுகளில் ஈடுபட வேண்டிய நிலையேற்படும் என நான் கருதவில்லை என தெரிவித்துள்ள அவர், கச்சதீவின் தற்போதைய நிலையில் மாற்றங்கள் வேண்டும் என எவரும் இதுவரை வேண்டுகோள் விடுக்க வில்லை எனவும் கூறினார். (அ)*

# மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்!

*மட்டக்களப்பு, ஏப். 05*

*மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிண்ணையடி பகுதியை சேர்ந்த ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.*

*54 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்காக மின்சார வடத்தை நீர் இறைக்கும் இயந்திரத்துடன் பொருத்த முயற்சித்த போது மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.*

*உயிரிழந்தவர், வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.*

*சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)*

# குருநாகலை சேர்ந்த இருவர் ஒரேநாளில் டுபாயில் மரணம்

*கொழும்பு, ஏப். 05*

*ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரண்டு பிரதேசங்களை சேர்ந்த இருவர் துபாயில் பணியாற்றிய நிலையில் ஒரே நாளில் இருவரும் உயிரிழந்தனர் என்று தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.*

*இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஆராச்சிக்கட்டு நல்லதரன்கட்டு கிரிவெல்கெலேயைச் சேர்ந்த 28 வயதான சந்துன் மதுசங்க என்ற இளைஞரும் ஆராச்சிக்கட்டு அண்டன்வில்வத்தையைச் சேர்ந்த ரமேஷ் உதார திலின என்ற 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையும் ஆவார்.*

*இவர்கள் குருநாகலில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றில் இருந்து டுபாய்க்கு வேலைக்குச் சென்றிருந்தனர் என்று உறவினர்கள் கூறினர்.*

*தினமும் இவர்கள் தமது உறவினர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொணடிருந்தனர். எனினும், அவர்கள் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் தமது உறவினர்களிடம் தாங்கள் சுகவீன முற்றுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.*

*உடல்நிலை மோசமடைந்ததையடுத்து உள்ளூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர்கள் கடந்த 30ஆம் திகதி உயிரிழந்தனர் என்று பிரதேச வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

*இதேவேளை, இலங்கை அரசாங்கம் தலையிட்டு இறந்தவர்களின் உடல்களை இந்த நாட்டுக்குக் கொண்டு வந்து, முறையான நியாயமான விசாரணை நடத்தி, மரணத்துக்கான காரணங்களை கண்டறிய வேண்டும் அவரது உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)*

# நடிகை தமிதா, கணவர் கைது!

*கொழும்பு, ஏப். 05*


*கொரியாவில் வேலை வாங்கித் தருவதாக கூறி பணமோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட நடிகை தமிதா அபேரத்ன மற்றும் அவரது கணவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.*

*கோட்டை நீதிவான் நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.*

*அவரைக் கைது செய்வதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சுமார் முப்பது அதிகாரிகள் கொண்ட பொலிஸ் படையொன்று கோட்டை நீதிமன்றத்திற்கு வருகை தந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*இதேவேளை, கடந்த 2ஆம் திகதி, குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் கீழ் இவர்களை கைது செய்வதை தடுக்கும் இடைக்கால உத்தரவை பிறப்பிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுத்துள்ளது. (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். நண்பர்கள், உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. புதியவர்கள் அறிமுகமாவார்கள். உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தினரை அனுசரித்துப்போங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் மோதல்கள் வரக்கூடும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

# கச்சதீவு விவகாரத்தில் உண்மை வெளியாக பா. ஜ. கவே காரணம்!

## அண்ணாமலை கூறுகிறார்

கோவை, ஏப். 05

கச்சதீவு பிரச்னையை பா. ஜ. க. கையில் எடுத்த பின்னரே மக்களுக்கு உண்மை தெரியவந்துள்ளது என்று அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

கோவையில் பிரசாரத்தில் ஈடுபட்ட அவர்,

சீமான் தினமும் ஒரு தத்துவம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் சரியான நேரத்தில் சின்னத்துக்கு விண்ணப்பிக்காமல், பா. ஜ. க. மீது முறைப்பாடு சொல்வதை ஏற்க முடியாது. ஜி. கே. வாசன், டி. டி. வி. தினகரன் ஆகியோர் முறையாக விண்ணப்பித்தார்கள். அதனால் அவர்களுக்கு சின்னம் கிடைத்தது.

கச்சதீவு பிரச்னையை பா. ஜ. க. கையில் எடுத்த பின்னரே, மக்களுக்கு உண்மை தெரியவந்துள்ளது. தகவல் அறியும் உரிமை சட்ட ஆவணங்களை பொய் என்று அபத்தமாக கூறி வருகின்றனர்.

கொச்சையாகப் பேசுவதில் முதன்மையாகத் திகழ்கிறார் உதயநிதி ஸ்டாலின். மரியாதையைக் கொடுத்து, மரியாதையைப் பெற வேண்டும். பணப் புழக்கத்தை தடுக்க, பறக்கும் படைகளை அதிகரிக்க வேண்டும்- என்றார். (ஐ)

# பா. ஜ. கவுடன் கூட்டணி வைக்குமாறு மிரட்டினர்!

## பிரேமலதா விஜயகாந்த்

சென்னை, ஏப். 05

"பா. ஜ. கவுடன் கூட்டணி வைக்க வேண்டும் என அச்சுறுத்தல் வந்தது. ஜெயலலிதா போல் தைரியமாக முடிவெடுத்தேன்" என்று தே. மு. தி. க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் தொகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அ. தி. மு. க. பணிமனையில் கூட்டணி ஒப்பந்தம் போடும்வரை பா. ஜ. கவிடம் இருந்து எவ்வளவோ நிர்பந்தங்கள் வந்தன. எல்லாவற்றையும் தூக்கியெறிந்து தைரியமாக ஜெயலலிதா மாதிரி முடிவெடுத்தேன். இந்த முறை கூட்டணி அ. தி. மு. க. உடன்தான்,



இதில் எந்தவித மாற்றமும் இல்லை என்று உறுதியாக இருந்தேன். மக்களுக்காக இந்த முடிவை எடுத்தேன்.

பா. ஜ. கவிடம் இருந்து எத்தனையோ நிர்பந்தங்கள் வந்தன. எங்களின் வங்கி கணக்குகளை எல்லாம் முடக்குவோம் என பயமுறுத்தினார்கள். நாங்கள் பனங்காட்டு நரி. எந்த சலசலப்புக்கு அஞ்ச மாட்டோம். எத்தனை சோதனைகள் வந்தாலும் பயப்படப்போவது இல்லை." என்று கூறினார். (ஐ)

# ஓ. பி. எஸ்ஸை தோற்கடிக்க பழனிசாமி வியூகம்!

சென்னை, ஏப். 05

இராமநாதபுரத்தில் களமிறங்கியுள்ள முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தை தோற்கடிக்க எடப்பாடி பழனிசாமி ஆர்வம் காட்டி வருகிறார்.

அ. தி. மு. க. தொண்டர்கள் தன் பக்கம்தான் இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க இராமநாதபுரத்தில் மட்டும் போட்டியிடுவதாக பன்னீர்செல்வம் தெரிவித்திருந்தார். அவர் வெற்றிபெற்றுவிடக்கூடாது என்பதில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி உறுதியாக இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக அ. தி. மு. க . பொதுச்செயலாளர் பழனிசாமி இராமநாதபுரம் தொகுதியில் 10 பேர் கொண்ட சிறப்பு குழுவை அமைத்துள்ளார். (ஐ)

# 12ஆம் திகதி தமிழகம் வரும் ராகுல் காந்தி!



சென்னை, ஏப். 05

தமிழகத்துக்கு 12ஆம் திகதி வரும் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, தி. மு. க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கோவை, திருநெல்வேலியில் பிரசாரம் மேற்கொள்வார்.

தமிழ்நாட்டில் 9 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறது. இந்நிலையில், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் தலைவர் ராகுல்காந்தி, தேசிய பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி ஆகியோரும் தமிழகம் வந்து பிரசாரம் மேற்கொள்ள உள்ளனர்.

தமிழகம் வரும் ராகுல் காந்தி கோவை, திருநெல்வேலியில் பிரசாரம் செய்யவுள்ளார். திருநெல்வேலியில் முதல்வர் ஸ்டாலினுடன் இணைந்து பிரசாரம் மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டு வருகிறது" என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கூசாமல் புளுகுகிறார் பிரதமர் நரேந்திர மோடி!

## முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஏப். 05

ஏழைகளுக்கான அரசு எனக் கூசாமல் புளுகுகிறார் பிரதமர் மோடி என்று தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பதிவில்,

"மோடியின் "புதிய இந்தியா" வில் டிஜிற்றல் வழிப்பறி. ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் 15 இலட்சம் என்று எளிய மக்களின் ஆசையைத் தூண்டி ஆட்சிக்கு வந்தவர்கள் செய்தது என்ன? சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தையும் செல்லாததாக்கி, வங்கிகளில் வரிசையில் நிற்க வைத்து வதைத்தார்கள்.

சுருக்குப் பையில் இருக்கும் பணத்தையும் பறித்துக் கொள்ளும் ஆட்சியாக, மினிமம் பேலன்ஸ் இல்லை என அபராதம் விதித்தே ரூ.21 ஆயிரம் கோடிக்கு மேல் ஏழைகளிடம் உருவியிருக்கிறார்கள்.

பெருநிறுவனங்களுக்கு பல லட்சம் கோடி கடன் தள்ளுபடி, பெருநிறுவன வரியை 30



விழுக்காட்டில் இருந்து 22 விழுக்காடாக குறைத்து, ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான கோடிகளை வரிச் சலுகையாக அள்ளித் தந்துவிட்டு, அதை ஈடுகட்ட மனதில் ஈரமே இல்லாமல், அல்லற்படும் ஏழை மக்களிடம் அரசே இப்படி டிஜிற்றல் வழிப்பறி செய்வதை அனுமதிக்கலாமா?

இது பணக்காரர்கள், கோடீஸ்வரர்களுக்கான அரசு அல்ல் ஏழைகளுக்கான அரசு எனக் கூசாமல் புளுகுகிறார் பிரதமர் மோடி. இதுவா ஏழைகளின் நலன் காக்கும் அரசு?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)

# சூடுபிடிக்கிறது அரசியல் களம்

## அநுர-சஜித் நேரடி விவாதத்துக்கு தயார்

கொழும்பு, ஏப். 05

**அநுரகுமார திஸாநாயக்கவுடன் நேரடி விவாதத்துக்கு வருமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு தேசிய மக்கள் சக்தி விடுத்த சவாலை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொண்டுள்ளது.**

பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் தமது கட்சியின் பொருளாதார பேரவை உறுப்பினர்களுடன் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவையின் விவாதத்துக்கு வர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பகிரங்கமாக சவால் விடுத்திருந்தது.

சுமார் 7 தடவைகள் இவ்வாறு சவால் விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த சவால் தொடர்பில் கருத்து வெளியிட்ட தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவை உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி,

"குறித்த சவாலை நாம் ஏற்கின்றோம். கொள்கைகள் பற்றி விவாதிப்பது நல்லது. ஆனால் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, குறித்த விவாதம் சிறப்பாக அமைய வேண்டுமெனில் அங்கும் இங்கும் கூவித்திரியாமல் எமக்கு அதிகாரப்பூர்வமாக தெளிவுபடுத்தவும். சஜித் பிரேமதாசவுடன் விவாதிக்க எமது கட்சி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தயார்.

ஜனாதிபதித் தேர்தலில் இவர்கள்தான் போட்டியிடுகின்றனர். எனவே, தலைவர்கள் ஊடாகவே பொருளாதாரத் திட்டங்களை மக்கள் அறிந்து கொள்வது நல்லது. எமக்கு அழைப்பு விடுப்பவர்கள் இன்று ஒரு கட்சியிலும் நாளை வேறொரு கட்சியிலும் இருக்கக்கூடும். எனவே,

தலைவர்களுக்கிடையிலான விவாதம்தான் சிறந்தது. அது சஜித்துக்கு முடியாவிட்டால் எமக்கு தெரியப்படுத்தட்டும். அடுத்தக்கட்டம் பற்றி அதன் பிறகு ஆராய்வோம்." - என்றார்.

இதற்கு பதிலளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் நளின் பண்டார கூறியவை வருமாறு,

" தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவையுடன் தான் விவாதம் கோரி இருந்தேன். இந்நிலையில் அதற்கு பதில் சவாலொன்றை சுனில் ஹந்துனெத்தி விடுத்துள்ளார். சவாலை ஏற்காமல், அதற்கு மறு சவால் விடுவது தப்புவதற்கான வழிமுறையாகும். எமது பொருளாதார பேரவை போல் அநுரவுக்கு சவால் விடுப்பதற்கு எமது கட்சி தலைவரும் தயார். அவர் ஓடி ஒளிய மாட்டார்."-என்றார். (அ)

# நாணய நிதிய விருப்பத்துக்கு அமைய அரசியலமைப்பு இயற்றப்படவில்லை!

## கூறுகிறார் பேராசிரியர் சரித ஹேரத்

கொழும்பு, ஏப். 05

"சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்துக்கு அமைய நாட்டின் அரசியலமைப்பு இயற்றப்படவில்லை" என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரை எந்தத் தேர்தலையும் நடத்த போவதில்லை என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது. சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் செயற்பாடுகள் எதிர்வரும் ஜூலை மாதம் நிறைவடைவதாக குறிப்பிடப்படுகின்றது. பொதுத்தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்னர் எந்தத் தேர்தலும் நடத்தப்படாது என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு தான் ஜனாதிபதி அவ்வாறு குறிப்பிட்டார். சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்துக்கு அமைய நாட்டின் அரசியலமைப்பு இயற்றப்படவில்லை.

ஆகவே அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும்-என்றார். (அ)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட பஸ் சேவைக்கு ஏற்பாடு!

கொழும்பு, ஏப். 05

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட பஸ் சேவையொன்று இடம்பெறவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று வெள்ளிக்கிழமை முதல் இந்த விசேட பஸ் சேவை இடம்பெறவுள்ளது.

பண்டிகைக் காலங்களில் கிராமங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ண ஹன்ச தெரிவித்துள்ளார்.

அதன்படி, 200 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு எதிர்வரும் 10ஆம் திகதி முதல் தினமும் 12 விசேட ரயில் சேவைகளை சேவையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாக ரயில் திணைக்களம் அறிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# மின் உற்பத்தி நிலையத்தில் விழுந்து ஆண் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 05

பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெம்மான உடமின் உற்பத்தி நிலையம் ஒன்றில் தவறி விழுந்து ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த உப மின் உற்பத்தி நிலையம் கடமையில் இருந்த பலாங்கொடை பட்டுகம்மான பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஜயவர்தன என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 4 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம்!

கொழும்பு, ஏப். 05

நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருக்கும் நிலையில், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்ற மேல் மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது 2 ஆயிரத்து 320 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. மூன்று வருடங்களின் பின்னர் 2024 ஆம் ஆண்டில் 4000 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், நாட்டின் பொருளாதாரம் மேலும் வலுவடையும் பட்சத்தில், அடுத்த வருடமும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேலதிக நிதி ஒதுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளதாவது- நீங்கள் ஒரு வகுப்பறையை மாத்திரம் பொறுப்பேற்கவில்லை. அந்த வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எதிர்காலத்தை தான் நீங்கள் பொறுப்பேற்கிறீர்கள்.

05 வயது முதல் 19 வயது வரை உள்ள மாணவர்கள் உங்களுடன் தமது நேரத்தை செலவிடுகிறார்கள். அதனால்தான் அவர்கள் வீட்டில் இருந்து பெறும் வழிகாட்டுதலைப் போன்றே பாடசாலையிலிருந்து அவர்கள் பெறும் வழிகாட்டுதலும் மிகவும் முக்கியமானது. அந்தப் பொறுப்பை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். மாணவர்களுக்கு பாட அறிவை மட்டும் கொடுக்க வேண்டியதில்லை. இந்த மாணவர்களின் வாழ்க்கையை நீங்கள்தான் வடிவமைக்க வேண்டும்.

இன்று, இணையத்தில் பாட அறிவை பெறலாம். ஆனால் மாணவர்களின் குணாதிசயத்தை கட்டியெழுப்ப இணையத்தால் முடியாது. நம் அனைவரின் வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதில் பெற்றோரிடமிருந்து பெற்ற வழிகாட்டுதலைப் போன்றே ஆசிரியர்களின் வழிகாட்டுதல் மிகவும் முக்கியமானது. அதனால்தான் ஆசிரியர் தொழில் உயர் தொழிலாகக் கருதப்படுகிறது. அந்த மரியாதையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன் -என்றார். (அ)

# மதுபான உரிமம் வழங்கலை அரசாங்கம் நிறுத்தவில்லை!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 05

நாட்டில் மதுபான உரிமம் வழங்கும் செயற்பாட்டை இது வரை அரசாங்கம் நிறுத்தவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் முறையாகவே இந்த மதுபான உரிமங்களை வழங்குகிறோம். பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் யாராவது உரிமம் கோரினால், முதலில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

ஆனால் இவ்வாறு உரிமம் கோரும்போது குறித்த பிரதேசத்திலுள்ள மக்களின் எதிர்ப்பு, சிவில் அமைப்புகளின் எதிர்ப்பு என்பன கருத்தில் கொள்ளப்படும். இவ்வாறான சம்பவங்களை மதுவரித் திணைக்களம் எனது கவனத்துக்கு கொண்டு வந்திருந்தது.

அங்கீகரிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில்தான் உரிமம் வழங்கவேண்டும் என்று பாராளுமன்றத்தில் கூறியதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

நாங்கள் மதுபான உரிமம் வழங்கும் செயற்பாட்டை நிறுத்தவில்லை. விதிகளை அதிகமாக அமுல்படுத்தச் சொல்லியிருப்பது மிகவும் நல்லது. நாங்கள் ஏற்கனவே அதைப் பின்பற்றி வருகின்றோம்-என்றார். (அ)

# கஞ்சாவுடன் மூவர் கைது!

வவுனியா, ஏப். 05

வவுனியாவில் பெறுமளவு கஞ்சா மீட்கப்பட்டுள்ளதோடு, மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா விசேட குற்றப்புலனாய்வு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் துரிதமாக செயல்பட்ட பொலிஸார் காரொன்றில் கடத்திச்செல்லப்பட்ட 9 கிலோகிராம் கஞ்சா மற்றும் 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை மீட்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, காரில் பயணித்த வவுனியா நெடுங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவரும் ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவரும் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயணித்த காரையும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரிஷ்வி தலைமையிலான குழுவினரே குறித்த கைதை மேற்கொண்டுள்ளனர். மேலும் கைது செய்யப்பட்டவர்களை விசாரணைகளை முடித்த பின்னர் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோத மீன்பிடியை தடுக்க பரிந்துரைகளை முன்வையுங்கள்!

## கடற்றொழில் அமைச்சின் செயலரிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 05

**வடக்கில் இடம்பெறுகின்ற இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வை குழு, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளது.**

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வை குழு, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தலைமையில் அண்மையில் கூடியது.

இந்த கூட்டத்திற்கு வடக்கு, கிழக்கை சேர்ந்த மீன்பிடி சமூகத்தினர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

வடக்கு கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மேற்கொள்ளும் சட்டவிரோத மீன்பிடியால் தமது வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக வடபகுதி மீனவ பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

அத்துடன், இந்திய மீனவர்களால் மேற்கொள்ளப்படும் ட்ரோலர் மீன்பிடி முறையால் கடல் வளத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு இதுவரை கணிப்பிடப்படவில்லை என்பதும் குழுவில் புலப்பட்டது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் கரையிலிருந்து 24 கடல் மைல் தூரத்தில் கடல் வளங்கள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் வடக்கில் அவ்வாறான கணக்கெடுப்பை சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனம் மேற்கொள்ளாமை குறித்து குழுவின் தலைவர் தனது அதிருப்தியை வெளியிட்டார்.

இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு வடக்கில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளைத் தடுப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்தி, இதனைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றை கூடிய விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு குழு, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், மீன் ஏற்றுமதிக்காக வெளிநாடுகளிலிருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதி குறித்தும் இங்கு நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மீன்களை இறக்குமதி செய்து மீன் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களில் ஒரு நிறுவனம், அதிக நோய்த்தொற்றை ஏற்படுத்தக்கூடிய இறால் வகையொன்றை இறக்குமதி செய்வதால் இலங்கையின் ஒட்டுமொத்த இறால் உற்பத்தியும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாக துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். (அ)

# பரீட்சைக் கடமை கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 05

பரீட்சை கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் அதிகரிக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேல்மாகாண பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இது தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டு அறிக்கை கோரப்படும் என்று கூறினார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் பரீட்சை கடமைகளில் ஈடுபடுபவர்களின் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என அவர் மேலும் கூறினார். (அ)

# இறைச்சிக்காக மாடுகள் கடத்திய பொலிஸார் உட்பட மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 05

யாழ்ப்பாணம் - புங்குடுதீவிலிருந்து சட்டவிரோதமாக இறைச்சிக்காக மாடுகளை கடத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவிலிருந்து மண்டைதீவு நோக்கி சட்டவிரோதமாக மாடுகள் கடத்தப்படுவதாகக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின்போது, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

கடத்திச் செல்லப்பட்ட 08 மாடுகள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளதுடன், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மக்கள் மத்தியில் மாயை ஒன்றை ஏற்படுத்த முனைகின்றது அரசு!

## கலாநிதி எம்.கணேசமூர்த்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 05

இலங்கை, பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து வருவதாக அரசாங்கம் மக்கள் மத்தியில் மாயை ஒன்றை ஏற்படுத்த முனைவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த வருட இறுதியில் இலங்கை 2.2 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடையும் என எதிர்பார்ப்பதாக அறிக்கை ஒன்றின் ஊடாக உலக வங்கி தெரிவித்திருந்தது.

குறித்த பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கையின் நடைமுறை சாத்தியம் தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தி தெரிவிக்கையில்-

பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக, அரசாங்கத்தின் கொள்கைகள் உரிய வகையில் பின்பற்றப்படவில்லை.

இதனிடையே, பொருளாதார வளர்ச்சி என்பது வெறுமனே பொருளாதார காரணிகளால் மாத்திரம் தீர்மானிக்கப்படுவதல்ல. அது அரசியல் காரணிகளாலும் தீர்மானிக்கப்படும்.

நாட்டில் தேர்தல் ஒன்று நடக்கவிருப்பதால் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து மீள்வதாக மாத்திரமே காட்டப்பட்டுள்ளது. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கான இடர்கள் நீங்கவில்லை- என்றார். (அ)

# 73 வயது மாமனாரைத் தாக்கி கொலை செய்த மருமகன் கைது!

கொழும்பு, ஏப். 05

73 வயது மாமனாரைத் தாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டில் 65 வயது மருமகன் கைது செய்யப்பட்டுள்ளதாக களனி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் களனி பிரதேசத்தைச் சேர்ந்த எ. எ.ரி. சிறிசேன என்ற 73 வயதுடைய நபராவார்.

இவர், தனது வீட்டில் வைத்து சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ள நிலையில், இவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரேதப் பரிசோதனையில், இவர் பலமாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# கார்த்திகைப்பூ குறித்து விசாரித்த பொறுப்பதிகாரிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவால் அழைப்பாணை!

யாழ்ப்பாணம், ஏப். 05

தமிழ் மக்களின் தாயக நிலத்தின் அடையாளச்சின்னங்களில் ஒன்றான கார்த்திகைப் பூவை, இல்ல மெய்வல்லுநர் போட்டி அலங்காரத்துக்கு பயன்படுத்தியது தொடர்பில் பாடசாலை நிர்வாகம் மற்றும் ஆசிரியர்களை விசாரணைக் குட்படுத்திய பொலிஸ் பொறுப்பதிகாரியை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்துள்ளது.

தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பாடசாலை இல்ல விளையாட்டு போட்டியில் கார்த்திகைப்பூ அலங்காரம் தொடர்பில் பொலிசாரும், புலனாய்வாளர்களும் விசாரணைகளை நடத்தியிருந்தனர். இது ஒரு அறிவிலித்தனமான நடவடிக்கையென அப்பொழுதே பல தரப்பினரும் விமர்சித்திருந்தார்கள்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை தெல்லிப்பளை பொலீஸ் நிலையம் அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவத்துக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கான விசாரணைக்கு தெல்லிப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பான அலுவலகத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பான அலுவலகத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (அ)

# மான் இறைச்சியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 05

புத்தளம் கல்லடி மீ ஓயா ஆற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மான் இறைச்சியுடன் நபரொருவர் புத்தளம் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானை வேட்டையாடி இறைச்சியை வெட்டிக் கொண்டிருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், 15 கிலோகிராம் இறைச்சி, மான் தலை, மான்தோல், தராசு மற்றும் கத்திகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கல்லடி பகுதியைச் சேர்ந்தவரென வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட இறைச்சி மற்றும் ஏனைய பொருட்கள் புத்தளம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

# யாழில் வீதியோரம் அநாதரவாக காணப்பட்ட மோட்டார் சைக்கிள்!

யாழ்ப்பாணம், ஏப். 05

யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதியில் வல்லை வெளி பகுதியில் வீதியோரம் அநாதரவான நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று காணப்பட்டது.

வல்லைவெளியில் இமையாணனுக்கு அண்மித்த பகுதியில் வீதியோர மதகு ஒன்றின் அருகில், வாய்க்காலுக்குள் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளும், தலைக்கவசமும் மட்டும் அங்கும் காணப்பட்டது. அது யாருடைய மோட்டார் சைக்கிள், அங்கு ஏன் காணப்படுகிறது என்பது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# தேர்தல் வாக்குகளுக்காக பா.ஜ.க. கச்சதீவை பயன்படுத்துகின்றது!

## ஒஸ்டின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 05

**இந்தியா கடல்எல்லையை தாண்டினால் அது இலங்கையின் இறைமையை மீறும் செயலாக கருதப்படும் என இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஒஸ்டின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் சூழலில் கச்சதீவு விவகாரத்தை பயன்படுத்துவதற்கு பா.ஜ.க முயற்சிகளை மேற்கொண்டுள்ள அதே வேளை, பா.ஜ.க வாக்குகளை கவரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் தேர்தலுக்கு பின்னர் இந்திய அரசாங்கம் மீண்டும் பழைய நிலைக்குச் செல்ல முடியாது. அது கடினமான விடயம் என ஒஸ்டின் பெர்ணாண்டோ தெரிவித்தார்.

கோவாவிற்கு அருகில் பாகிஸ்தான் கடல் பகுதியில் அத்துமீறும் திட்டத்தை முன்வைத்தால் இந்தியா அதனை அனுமதிக்குமா என கேள்வி எழுப்பியுள்ள ஒஸ்டின் பெர்ணாண்டோ, வங்காள விரிகுடாவில் பங்களாதேஷ் இவ்வாறு செயற்பாட்டால் இந்தியா எவ்வாறு பதிலளிக்கும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்

தமிழ்நாட்டில் பா.ஜ.கவுக்கு அதிக செல்வாக்கில்லை. அதன் காரணமாக வாக்குகளை கவரும் உத்தியாக இந்த விடயத்தை அது பயன்படுத்துகின்றது என ஒஸ்டின் பெர்ணாண்டோ கூறினார்.

இது தேர்தலுக்கான ஒரு கோசம் போல தோன்றுகின்றது.ஆனால் இப்படி ஒரு விடயத்தை தெரிவித்த பின்னர் அவர்கள் இதிலிருந்து பின்வாங்க முடியாது. அது கடினம் எனவும் ஒஸ்டின் குறிப்பிட்டார்.

பாரதிய ஜனதா தேர்தலில் வெற்றி பெறும் என தெரிவித்துள்ள அவர், தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இந்த விடயத்தில் முன்னர் தெரிவித்தவைகளில் இருந்து அவர்கள் பின்வாங்க முடியாது. நாங்களும் அவர்களும் இது குறித்து சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

தமிழ்நாட்டின் வாக்காளர்களை திருப்திப்படுத்துவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் நாங்கள் கச்சதீவில் மீன்பிடிப்பதற்கு எங்களுக்கு உள்ள உரிமைகளை மீட்போம் பயன்படுத்துவோம் என தெரிவிக்கலாம். ஆனால் இது சாத்தியமாஇல்லையா என்பது மற்றுமொரு விடயம் எனவும் குறிப்பிட்டுள்ள ஒஸ்டின், யார் இந்த விடயங்களை கட்டுப்படுத்துவார்கள். இந்திய எல்லை காவல் படையினர் என தெரிவிக்காதீர்கள் எனவும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் அழுத்தங்களுக்கு இலங்கை அரசாங்கம் அடிபணிந்தால் வடபகுதி மீனவர்களின் வாக்குகளில் குறிப்பிடத்தக்க வீதத்தினை இலங்கை அரசாங்கம் இழக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞர் ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஏப். 05

வெளிநாட்டிலிருந்து சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளை மோட்டார் சைக்கிளில் சென்று விற்பனை செய்து கொண்டிருந்த சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மாளிகாவத்தையில் உள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞராவார்.

சந்தேக நபரிடமிருந்து சுமார் 15 ஆயிரம் சிகரெட்டுகள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் மாளிகாவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# காங்கேசன்துறை பொலிஸ் நிலைய அலுவலர் ஹெரோயினுடன் கைது!

கொழும்பு, ஏப். 05

ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹிதோகம பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் அநுராதபுரம் - நாச்சியாதீவு பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 25 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தராவார்.

சந்தேக நபரிடமிருந்து 230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் அநுராதபுரம் - நொச்சியாகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு விடுமுறைக்காகச் சென்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# யாழ். மத்திய பஸ் நிலையத்தில் நெருக்கடியை நீக்க நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஏப். 05

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் நிலவும் நெருக்கடி நிலமைகளை நீக்குவதற்கும் சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

பஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை விஜயம் செய்த அமைச்சர் அங்குள்ள நிலமைகளை நேரில் அவதானித்ததுடன் துறைசார் அதிகாரிகள் மற்றும் பயணிகளுடன் கலந்துரையாடினார்.

இதன் தொடர்ச்சியாக இரவு, தனது அலுவலகத்தில் துறைசார் அதிகாரிகள் மற்றும் பொலிஸாருடன் நடத்திய கலந்துரையாடலில் சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகளை யாழ். மாநகர ஆணையாளர் உடனடியாக மேற்கொள்ளும்படியும், பயணிகள் மற்றும் பயணிகள் பஸ்களுக்கும் எவ்வித இடையூறுகளுமற்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் முகாமையாளருக்கு பணிப்புரை வழங்கினார். (அ)

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வை மீள ஆரம்பிக்க இதுவரை நிதி கிடைக்கவில்லை!

## வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, ஏப். 05

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குதொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,கொக்கிளாய் பகுதி கிராம அலுவலர், சட்டத்தரணிகளான வி கே நிறஞ்சன், கணேஸ்வரன் மற்றும் காணாமல் போனோர் அலுவலகம் சார்பாக சட்டத்தரணி துஷ்யந்தினி ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இந்நிலையில், அகழ்வு பணியை நடத்த இன்னும் நிதி கிடைக்கபெறவில்லை எனவும் தற்போது அகழ்வுப்பணிக்கென போடப்பட்டுள்ள பாதீடு அதிகமாக காணப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணத்தால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், பாதீட்டை சீர்செய்து அனுப்பி நிதியினை பெறுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அத்தோடு, குறித்த வழக்கு விசாரணை மே மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# அநுரவுடன் இணையுமா டலஸ் குழு?

கொழும்பு, ஏப். 05

பொதுஜன பெரமுனவில் இருந்து பாராளுமன்றத்தில் இணைந்து அரகலய போராட்டத்தின் போது எதிர்க்கட்சியில் இணைந்து விட்டு வெளியேறிய டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட குழுவினர் தேசிய மக்கள் சக்தியில் இணைய முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுடன் இது தொடர்பான பல கலந்துரையாடல்கள் இரகசிய மட்டத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் அறியமுடிகிறது.

டலஸ் அழகப்பெருமவுக்கு மேலதிகமாக, சுதந்திர மக்கள் பேரவையின் உறுப்பினர்களான சரித ஹேரத் மற்றும் குணபால ரத்னசேகர ஆகியோரும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் கூறுகின்றன.

எனினும் இந்த குழுவை தேசிய மக்கள் சக்தியில் இணைக்க ஜேவிபி கட்சி தயக்கம் காட்டி வருவதாகவும், ஆனால் தேசிய மக்கள் கட்சி கட்சி எந்தவித தயக்கத்தையும் காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதும் கூட சுதந்திர ஜனதா சபையின் குழு ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதுடன், பதவி தொடர்பான பிரச்னை காரணமாக டலஸ் அழகப்பெரும கட்சியில் இணைவதற்காக நடத்திய பேச்சுவார்த்தை முறிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கைக்கு விமானம் மூலம் கொக்கேய்ன் கடத்தல்!

## போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மூவர் கைது!

கொழும்பு, ஏப். 05

தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கைக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டதாக கூறப்படும் கொக்கேய்ன் போதைப்பொருளை பெற்றுக்கொள்வதற்காக ஒருகொடவத்தை சுங்க பிரிவின் களஞ்சியசாலையில் பொருட்கள் விநியோக நிலையத்துக்குச் சென்றிருந்த ஒருவர் உட்பட மூவர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, இலங்கைக்கு கொக்கேய்ன் போதைப்பொருளை இறக்குமதி செய்வதற்கு உதவிய மேலும் இரு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# பட்டிருப்பு வலய பணிப்பாளரை இடமாற்றம் செய்யவேண்டாம்!

## பெற்றோர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



மட்டக்களப்பு, ஏப். 05

**கடந்த சில நாட்களாக பட்டிருப்பு வலயக் கல்விப் அலுவலகத்திற்கு எதிராக சிலரின் தூண்டுதலில் நடைபெறும் போராட்டங்களுக்கு எதிராக பெற்றோர்கள் வலயக் கல்விப் மணிமனைக்கு முன்பு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள், நேர்மையான வலயக் கல்விப் பணிப்பாளர் எங்களுக்கு தொடர்ச்சியாக வேண்டும், கிராமப்புற பாடசாலைகளை வாழவைக்க வந்த வலயக் கல்விப் பணிப்பாளரை வேலை செய்ய விடு, கௌரவ ஆளுநரே எமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டும் வலயக் கல்விப் பணிப்பாளரை வேலை செய்ய விடு, வலயக் கல்விப் பணிப்பாளரை சுயமாக இயங்க விடு போன்ற பதாதைகளை தாங்கியவாறு வலயக் கல்வி அலுவலகம் முன்பு இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் வலயத்துக்கு வருகை தந்திருந்த மாகாண கல்வி அதிகாரிகளைச் சந்தித்து தங்களது மகஜரை கையளித்தனர். (அ)

# மூதூர் பாட்டாளிபுர மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் விநியோகம்



திருமலை, ஏப். 05

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாட்டாளிபுரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை அபிவிருத்தி செய்தல் என்ற நோக்குடன் மாணவர்களுக்கான உடைகள், புத்தகப் பைகள், பயன் தரும் மரக்கன்றுகள் என்பன வழங்கப்பட்டன.

எம் கடமை அமைப்பின் பணிப்பாளர் இராசமாணிக்கம் ஜீவேந்திரன் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியாட்சகர் நிசங்க கொடமுன, சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துசார, மூதூர் வர்த்தக சங்கத் தலைவர் என்.எச்.பஸ்ரி நஜா, கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பாட்டாளிபுரம் அறநெறிபாடசாலை ஒருங்கிணைப்பாளர் நகுலேஸ்வரன், ஆசிரியர்கள், பெற்றார்கள்,மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# தந்தை செல்வா நினைவு நிகழ்வு



திருமலை, ஏப். 05

தந்தை செல்வாவின் 126 ஆவது ஜனன தினத்தினை ஒட்டி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி திருக்கோணமலை மாவட்டத் தலைவர் சண்முகம் குகதாசன், செயளாலர் திரு.கந்தசாமி செல்வராசா (சுப்ரா) மாவட்டக் கிளை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கிழக்கு மாகாண ஆளுநரினால் வவுணதீவு வீதி திறந்து வைப்பு





மட்டக்களப்பு, ஏப். 05

140 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு வீதி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டதுடன், மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, திறன் விருத்தி, மகளிர் அபிவிருத்தி, நீர் விநியோகத் துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரத்தினம் உட்பட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

# பாவாணர் நூல் வெளியீடு நாளை

நிந்தவூர், ஏப். 05

சிரேஷ்ட ஊடகவியலாளரும் அதிபருமான செல்லையா பேரின்பராசா எழுதிய "பாவாணர் அக்கரைப்பாக்கியனின் வாழ்வியல் பயணம்" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் நல்லதம்பி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சுவிஸ் உதயத்தின் கிழக்கு மாகாணத் தலைவருமான மு.விமலநாதனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் தொழிலதிபரும் சுவிஸ் உதயத்தின் தாய்ச் சங்க பொருளாளருமான க.துரைநாயகம் பிரதம அதிதியாகவும் பொத்துவில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் மா.இராமக்குட்டி தினகரன் நாளிதழ் தினகரன் வாரமலர் என்பவற்றின் முன்னாள் பிரதம ஆசிரியர் க.குணராசா கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் செ.கலையரசன் மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம்




ஏ.எல்.எம்.சலீம் ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் கவிஞர் ப.மதிபாலசிங்கம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் துறைநீலாவணை ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இரத்தினசபா சசி சர்மா கல்முனை மெதடிஸ்த சேகர முகாமைக் குரு அருட்திரு.ரவி முருகுப்பிள்ளை ஆகியோர் ஆன்மீக அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் கண.வரதராஜனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் நூல் நயவுரையினை ஊடகவியலாளரும் கல்முனை கல்வி வலய தமிழ்பாட வளவாளருமான ஜெஸ்மி.எம். மூஸாவும் நன்றியுரையினை ஊடகவியலாளரும் ஆசிரியருமான சா. நடன சபேசனும் நிகழ்த்துவர்.

இந்த நிகழ்வை தேசிய கலைஞர் ஏ.ஓ.அனல் ஆசிரியர் தி. கோகுலராஜ் ஆகியோர் தொகுத்து வழங்கவுள்ளனர். மேலும் பழைய திரைப்பட பாடல்களை பாவாணர் அக்கரைப்பாக்கியன் தனது குரலில் நிகழ்வின் போது பாடுவார். இந் நூலின் முதற் பிரதியை க. துரைநாயகமும் இரண்டாம் பிரதியினை சுவிஸ் உதயத்தின் தாய்ச் சங்கத் தலைவர்டி.எல். சுதர்ஷனும் பெற்றுக் கொள்வர். கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மாணவிகளின் நடனமும் இடம்பெறவுள்மை குறிப்பிடத்தக்கது. (அ)

# அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கல்



அம்பாறை, ஏப். 05

அம்பாறை மாவட்ட பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 150 விவசாயிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன. விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் 150 விவசாயிகளுக்கு நீர் பம்பிகள் மற்றும் கிருமிநாசினி தெளிப்பான் போன்ற விவசாய உபகரணங்கள் ஆளுநரால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முத்துபண்டா உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உக்ரைனுக்கு மேலும் இராணுவ ஒத்துழைப்பு

## நேட்டோ அமைப்பு தீர்மானம்

நியூயோர்க், ஏப். 05

உக்ரைனுக்கு மேலும் இரா ணுவ உதவிகளை நேட்டோ அமைப்பு தீர்மானித்துள்ளது. நேட்டோ அமைப்பின் வெளி விவகார அமைச்சர்கள் இது தொடர்பில் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில், அமைப்பின் 75 வது ஆண்டு பூர்த்தியினை கொண்டாடியுள்ளனர்.இந்த அமைப்பின் ஊடாக ஐரோப் பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்கிடையில் அரசியல் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் பரிமாறப்பட்டதாக தெரிவிக் கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்டன்,நேட்டோ அமைப்பின் பொதுச் செயலா ளர் ஜென்ஸ் ஸ்டோல்டன் பெர்க் , நோட்டோவிற்கான அமெரிக்க தூதுவர் யூலியன் ஸ்மித் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.



நேட்டோ அமைப்பு 12 உறுப்பினர்களுடன் ஆரம்ப மானது.அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உறுப் பினர்கள் இதில் அங்கம் வகித் திருந்தனர்.

சோவியத் யூனியனால் ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படு வதாக கூறி இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் பாதுகாப்பு தரப்பினர் கூட்டாக செயற்படவும், பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை ஏற்படுத்தவும் வழி ஏற்பட்டது. தற்போது நேட்டோ அமைப் பில் 32 நாடுகள் அங்கம் வகிக் கின்றமை குறிப்பதக்கது. (அ)

# இஸ்ரேலில் இணையத்தள சேவையை குறிவைத்து தாக்குதல் நடத்தத்திட்டம்!

ஜெருசலேம், ஏப். 05

இஸ்ரேலில், இணையத்தள சேவைகள் மீது தாக்குதல் நடத் தப்படலாம் என அந்நாட்டின் தேசிய இணையத்தள சேவை யகம் எச்சரித்துள்ளது.

காசாவுக்கு எதிரான போரை இஸ்ரேல் தீவிரப்படுத்தி வரும் நிலையில் இஸ்ரேலை குறி வைத்து ஈரான் இணையத்தளத் தாக்குதல்களை நடத்தத் திட்ட மிடுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 7ஆம் திகதி #OpIsrael என்ற ஹேஷ்டேக் பெயரில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள் ளதாகத் தகவல் வெளியாகியுள் ளது.

இந்நிலையில் இஸ்ரேல் மக்களை எச்சரிக்கையுடன் இருக்கும்படி, அந்நாட்டின் தேசிய இணையதள சேவைய கம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜப்பானில் நேற்றையதினமும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

ரோக்கியோ, ஏப். 05

ஜப்பானில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது.

ஜப்பானின் வடகிழக்கு கடற்கரையை ஒட்டிய புகுஷி மாவில் 6 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

பூமிக்கு அடியில் 32 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக ஐரோப்பிய - மத்திய தரைக் கடல் பகுதிகளுக்கான நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், சுனாமி எச்ச ரிக்கை ஏதும் விடுக்கப்பட வில்லை.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் ஏதும் இதுவரை வெளியாக வில்லை.

முன்னதாக நேற்று முன் தினம் தாய்வானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 9 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 900 பேர் வரையில் காயமடைந் துள்ளனர். (அ)

# அமெரிக்கா - சீனா தலைவர்கள் பேச்சு

## இரு நாட்டு உறவை வலுப்படுத்த உத்தேசம்



நியூயோர்க், ஏப். 05

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஆகியோர் தொலை பேசி உரையாடல் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றமான சூழலைத் தணிக் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது, காலநிலை மாற்றம், போதைப்பொருட் களுக்கு எதிராக இரு நாடுக ளுக்கும் இடையிலான கூட்டு முயற்சிகள் உட்பட ஒத்துழைப் பின் வழிகள் குறித்து அவர்கள் விவாதித்தனர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

எனினும், தாய்வான் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பாக இரு தலைவர்க ளுக்கும் இடையே கருத்து வேறு பாடு நிலவி வருவதாக சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தாய்வானுக்கு ஆதரவை வழங்கினாலும், ஆனால் தென் சீனக் கடலில் அமெரிக்காவின் தலையீடு தேவையற்றது என்று சீன ஜனாதிபதி அமெரிக்கா வுக்கு அறிவித்துள்ளார்.

குறித்த அழைப்பின் போது, சீனா மற்றும் சீனாவுக்கு சொந்தமான நிறுவனங்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகள் குறித்தும் சீன அதிபர் கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது.

இந்த நிலை சீனாவின் பொருளாதாரம், வர்த்தகம், அறிவியல் மற்றும் தொழில்நுட் பத்தை ஒடுக்கும் முடிவில்லாத பிரசாரமாக இது அமெரிக்கா வால் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

சீனாவின் உயர்தொழில் நுட்ப வளர்ச்சியை அடக்கி, சீனாவின் வளர்ச்சிக்கான சட்டபூர்வ உரிமையை பறிக்க அமெரிக்கா வலியுறுத்தினால், அதற்கு எதிராக சீனா நடவ டிக்கை எடுக்கும் என்று சீன ஜனாதிபதி வலியுறுத்தியுள் ளதாகவும் சர்வதேச ஊடகங் கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு கொண்ட பகுதிகள் காணப்பட் டாலும் எதிர்காலத்தில் உறவை பொறுப்புடன் நிர்வகிக்க எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். (அ)

# கனடாவில் குடியேறிகளின் வருகையால் கடும் நெருக்கடி

மொன்றியல், ஏப். 05

தற்காலிகக் குடியேற்றவாசி களின் அதிகரித்த எண்ணிக்கை காரணமாக ஏற்பட்டுள்ள அழுத்தங்களை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும், திறனை கடந்து அளவுக்கு அதிகாமான குடியேற்றவாசிகளை உள்வாங்கியுள்ளதாகவும், எனவே நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

டாட்மவுத்தில் நடந்த ஒரு நிகழ்வில் பேசிய ட்ரூடோ, தற்காலிக குடியேற்றம், குறிப்பாக சர்வதேச மாணவர் கள் மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் கூர்மையான உயர்வை எடுத்துக்காட்டினார்.

"தற்காலிக வெளிநாட்டு ஊழியர்களாக இருந்தாலும் சரி அல்லது சர்வதேச மாணவர்களாக இருந்தாலும் சரி கனடாவால் உள்வாங்க முடிந்ததை விட அதிகமா னவர்கள் உள்வாங்கப்பட்டுள் ளனர்" என பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2017 ஆம் ஆண்டில், மக்கள் தொகையில் இரண்டு வீதமாக மட்டுமே தற்காலிக குடியேறியவர்கள் தற்போது 7.5 வீதமாக அதிகரித்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

எனவே தற்காலிக குடியேற்றவாசிகளை கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமை சர்வதேச




மாணவர்களுக்கு மனநலப் பிரச்னைகளை ஏற்படுத்துவ தாகவும், வணிகங்கள் தற்காலிக வெளிநாட்டு ஊழியர்களை அதிகம் சார்ந்திருக்கச் செய்வதாகவும், இது குறிப்பிட்ட தொழில்களில் ஊதியத்தைக் குறைக்கிறது என்றும் பிரதமர் கூறினார்.

"நாங்கள் அந்த எண்களைக் குறைக்க விரும்புகிறோம். இது குடியேற்றத்திற்கான ஒரு பொறுப்பான அணுகுமுறையாகும், எங்கள் சமூகங்களில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்திய தற்காலிக குடியேற்றத்தை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

2022 இல், கனடா 5.5 இலட்சம் சர்வதேச மாணவர்களை உள்வாங்கியுள்ளது. இதில் 40 வீதமானவர்கள் இந்திய மாணவர்கள் ஆவர். மேலும் கனடாவில் மாணவர் வீசாவில் 3.2 இலட்சம் இந்தியர்கள் தங்கியுள்ளனர்.

ஆனால் குடியேற்றத்தின் வேகம் கனடாவில் வீடுகளை நிர்மாணிப்பதை விட அதிகமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் 35 இலட்சம் குடியிருப்புகள் குறைவாக இருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக கனடாவுக்குள் அனுமதிக்கப்பட்ட தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கைக்கு இலக்கை நிர்ணயிக்கும் என்று கனடா குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் மார்ச் 21 ஆம் திகதி அறிவித்தார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில், தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை கனடாவின் மக்கள் தொகையில் ஐந்து வீதமாக குறைப்பதே இலக்கு என அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (அ)

# விவசாய நவீன மயமாக்கல் சபை ஒன்று நிறுவத் திட்டம்!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 05

**விவசாயத் துறையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் விவசாய அமைப்புக்களை மறுசீரமைப்புச் செய்வதனை கண்காணிப்பதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் விவசாய நவீன மயமாக்கல் சபையொன்றை நிறுவ உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**




ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம் தொடர்பிலான மீளாய்வுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட கொள்கைத் திட்டம், அதனை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் காமினி சேனாநாயக்கவினால் ஜனாதிபதியிடம் இதன்போது கையளிக்கப்பட்டது.

இந்த விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 25 மாவட்டங்களின் 26 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து 26 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு அவற்றுக்கான முன்னோடித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நிதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில், நெல் மற்றும் ஏனைய விவசாய பயிர்கள், பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட விவசாயத்தின் பலதரப்பட்ட அம்சங்களையும் நவீனமயப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பயிர்ச்செய்கைக்காக 5 இலட்சம் ஏக்கர் நிலத்தை விடுவித்தல் மற்றும் இலங்கையில் உள்ள விவசாயிகளை நவீன விவசாய நுட்பங்களில் ஈடுபடுத்தும் திட்டம் குறித்தும் ஆராயப்பட்டது. மேலும், காலநிலை மாற்றங்களின் போதான, நீர் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அதற்காக நாட்டில் சிறந்த திட்டமொன்றை செயல்படுத்த வேண்டிதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்துடன், விவசாயிகளின் காணி உரிமை தொடர்பான பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வு வழங்குதல், விவசாய நவீனமயப்படுத்தலுக்கு அவசியமான நவீன இயந்திரங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் ஊக்குவித்தல் போன்ற சவால்கள் குறித்தும், நவீன விவசாய முயற்சிகளில் ஈடுபட விரும்பும் இளைஞர்களை வலுவூட்டுவது தொடர்பிலான விடயங்கள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# போலி வைத்தியர்கள் குறித்து அவசர விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு, ஏப். 05

நாட்டில் போலி வைத்தியர்கள் மற்றும் போலி வைத்திய நிலையங்கள் தொடர்பில் அவசர விசாரணைகளை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

போலி வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவர்கள் மருத்துவச் சபையில் பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் மாகாண மட்டத்தில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாடளாவிய ரீதியில் பதிவு செய்யப்படாத வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் பல இருப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறான வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்களை உடனடியாக விசாரணை செய்யுமாறு மாகாண மற்றும் மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வவுனியாவில் ஆசிரியர் தாக்கியமையால் மாணவன் வைத்தியசாலையில் அனுமதி!

வவுனியா, ஏப். 05

வவுனியாவில் ஆசிரியர் தாக்கியதில் 2 ஆம் தரத்தில் கல்வி கற்கும் சிறுவனொருவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலையொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சிறுவனுக்கு உயிர் எழுத்துக்கள் தெரியாத காரணத்தினால் அவரை ஆசிரியர் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஆசிரியர் தாக்கியதில் சிறுவனின் நெற்றியில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், தலை மற்றும் கண் பாதிப்படைந்துள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ)




# மன்னாரில் நன்னீர் புகைக் கருவாடு பதனிடும் நிலையம் திறந்துவைப்பு

மன்னார், ஏப். 05

மன்னார்- மாந்தை, குருவில் கிராமத்தில் நன்னீர் புகைக் கருவாடு பதனிடும் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

உலக உணவுத் திட்டத்தின் நிதி பங்களிப்புடன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனால் நேற்று முன்தினம் குறித்த உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் க.அரவிந்தராஜ் ,மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட உலக உணவுத் முகாமைத்துவ அலகு தலைமை அதிகாரி ,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(அ)

# இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் 74,499 இலங்கையர் வெளிநாட்டுக்கு!

கொழும்பு, ஏப். 05

2024 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் 74,499 இலங்கையர்கள் வேலைக்காக வெளிநாடு சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அவர்களில் 34,599 பேர் வேலைக்காக வெளிநாடு சென்ற பெண்கள் என்பதும், அந்தத் தொகை சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் வெளிநாடு சென்ற மொத்த எண்ணிக்கையில் 46 சதவீதமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வருடம் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் வேலைக்காக வெளிநாடு சென்ற ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 39,900 எனவும் பெரும்பாலான இலங்கையர்கள் குவைத்துக்கு வேலைக்காக சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புள்ளிவிவரங்களின் படி, கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கையர்கள் தென் கொரியா, இஸ்ரேல் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் வேலை தேடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பது ஒரு முக்கிய விடயமாகும்.

இதன்படி, 2024 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் மாத்திரம் தென் கொரியாவுக்கு 2,374 இலங்கையர்களும், இஸ்ரேலுக்கு 2,114 பேரும், ருமேனியாவுக்கு 1,899 பேரும், ஜப்பானுக்கு 1,947 பேரும் வேலைக்காக சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கூறுகிறது.

அத்துடன் வேலைக்காக வெளிநாடு சென்ற இலங்கையர்கள் 2024 ஆம் ஆண்டின் முதல் 2 மாதங்களில் மட்டும் 963.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

(அ)

# சேவையிலிருந்து விலகியுள்ள முப்படையினருக்கு மன்னிப்பு

கொழும்பு, ஏப். 05

உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் சேவையில் இருந்து விலகியுள்ள முப்படையினருக்கு பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றின் ஊடாக இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

இதன்படி ஏப்ரல் 20 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 20 ஆம் திகதிவரை குறித்த பொது மன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் முப்படையினரும் விடுமுறையின்றி பணிக்கு சமூகமளிக்காதுள்ள பணியாளர்களும் சட்டரீதியாக சேவையில் இருந்து விலகிச்செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுமன்னிப்பு காலத்தில் பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் வெளியேறுவதற்கு இவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

(அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்தது!

கொழும்பு, ஏப். 05

2024 ஆம் ஆண்டின் கடந்த மூன்று மாதங்களில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கம் குறைவடைந்துள்ளதாகவும், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 22.8 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஜனவரியில் 10,417 பேரும், பெப்ரவரியில் 6007 பேரும், மார்ச் மாதத்தில் 3615 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கொழும்பு மாநகர சபையில் கஸ்பேவ, கடுவெல, மஹரகம, பியகம, கம்பஹா, வத்தளை, குருநாகல், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்கள் டெங்கு அபாயப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் இல்லாத வகையில் தாம் வாழும் சூழலைச் சுத்தப்படுத்துவதில் பொதுமக்களின் கவனம் செலுத்தப்பட வேண்டுமென தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(அ)

# மைத்திரிக்கு இடைக்கால தடை!

கொழும்பு, ஏப். 05

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக பதவி வகிப்பதை தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை பிறப்பித்துள்ளது.

ஏப்ரல் 18 ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் இந்த இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க செய்த



முறைப்பாட்டுக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# முகாமைத்துவ உதவியாளர் கைது!

கொழும்பு, ஏப். 05

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் அரச முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்திற்குரிய அரச முகாமைத் துவ உதவியாளர் இலஞ்ச ஊழல் விசா ரணை ஆணைக்குழு அதிகாரிகளால் சுகாதார அமைச்சுக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அதன்படி சுகாதார அமைச்சின் போக்குவரத்து திணைக்களத்தில் கடமை யாற்றும் பொது முகாமைத்துவ உதவி யாளரே இவ்வாறு கைது செய்யப்பட் டார்.

கலிகமுவ, போயாகம பிரதேசத்தில் நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபர் கைதானார்.

வாகனத்தை கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கி அறிக்கை அளிக்க 80 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டதாக அவர் மீதான குற்றச்சாட்டு வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விலகி சென்ற...

இதனை நாம் நீதிமன்றம் ஊடாக வெற்றி கொண்டோம். அதேபோல் இன்றைய நாளில் நாம் மிகவும் மகிழ்ச்சி யடைகின்றோம். கட்சியை வலுப்படுத் தும் நடவடிக்கையினை நாம் முன்னெ டுத்துச் செல்வோம்.

கட்சியின் எதிர்காலம் தொடர்பி லேயே நாம் கவனம் செலுத்தியுள்ளோம். சுதந்திரக் கட்சி புதிய பயணத்தை ஆரம் பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நாம் கட்சி உறுப்பினர்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம். கட்சிக்குள் உள்ள குறைபாடுகள் தொடர் பாக நாம் இனியும் பேசமாட்டோம்.

இச்சந்தர்ப்பத்தில் கட்சி உறுப்பி னர்கள் அனைவரையும் ஒன்றிணை யுமாறு கோரிக்கை விடுக்கின்றோம். அதேபோல்க கட்சியில் இருந்து விலகிச்சென்றவர்கள் மனஸ்தாபங்களை களைந்து மீண்டும் இணையுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

ஏனென்றால்இது உங்களின் தாய்வீடு. சுதந்திரக்கட்சியை பலப்படுத்துவதற்காக உழைத்தவர்கள் பலர் உள்ளனர். நாம் அரசியல் பழிவாங்கலை மேற்கொள்ள மாட்டோம். மைத்திரிபால சிறிசேன வுக்கு ஆதரவானவர்களாக இருந்தாலும் சரி எம்முடன் இணையுமாறு கோருகின்றேன் சுதந்திரக் கட்சியை பலப்படுத்தவும் கட்சி உறுப்பினர்க ளையும் பாதுகாக்கவும் நாம் தயாராகவே உள்ளோம்-என்றார். (அ)

## தூண் விழுந்து...

தரம் 6 இல் கல்வி பயிலும் 11 வயது மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மலசலகூட குழிக்குள் இறக்குவதற்கு கொண்டுவரப்பட்டிருந்த கொங்கிறீட் தூண் மாணவன் மீது சரிந்து விழுந்தில் அவர் படுகாயமடைந்தார். இதையடுத்து அவரை ஆசிரியர்கள் மருத்துவமனைக் குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## கட்சிகளை...

என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இந்த நாட்டில் பொருளாதாரப் பிரச்னை ஏற்பட்டதன் காரணமாக இரண்டு தேர்தலுக்கு செலவழிக்கின்ற செலவை ஒரே நேரத்தில் வைக்கும் நடவடிக்கையை எடுக்க முடியும். அந்த வகையில இந்த தேர்தல் இரண்டையும் ஒன்றாக வைத்தால் செலவை குறைக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அதே நேரத்தில் கட்சிகளுக்கு இடையில பலவிதமான குழப்பங்கள் நிலவுகின்ற காரணத்தினால் எந்த கட்சியில் இருந்து வாக்கு கேட்பது? எவ்வாறு உடைத்துக் கொண்டு செல்வது? யாரை உடைக்கலாம்? என்ற எதிர்பார்ப்புகளோடு இருக்கும் கட்சிகளுக்கு இது சிக்கலாக அமையும். ஏனென்றால் ஜனாதிபதி ஒருவர் வந்த பிறகு, ஜனாதிபதியின் கட்சி வெல்வது மரபாக உள்ளது. அல்லது பாராளு மன்றத் தேர்தலுக்கு பிறகு வருகின்ற தலைவர் அதிகாரத்தை கைப்பற்றுகின்ற மரபு இங்கு இருக்கின்றது.

ஆனால் இந்த தேர்தல்களை ஒன்றாக வைத்தால் இந்த சிக்கல் வரும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதற் கான எதிர்பார்ப்புகள் இருந்தாலும் அவர் எல்லா கட்சிகளையும் உடைப் பதற்கு பார்த்துக் கொண்டிருக்கின்றார்- என்றார். (அ)

## தாக்குதலுக்கு...

தாக்குதலை நடத்த முயன்றவேளை ஊரில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு குறித்த கும்பலை மடக்கிப் பிடித்து ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் ஊர்காவற்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## பாராளுமன்ற

நாளில் நடத்துமாறு சபாநாயகர் கோரிக்கை விடுத்திருந்தார். பொருளா தார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் இரு தேர்தல்களும் ஒரே நாளில் நடத்தப் பட்டால் அதன்மூலம் மக்களுக்கு நிவார ணம் கிட்டும்.

ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் என்பன ஒரே நாளில் நடத்தப்பட்டால் அது நல்லது. அதன்மூலம் செலவுகளை யும் குறைத்துக்கொள்ளலாம். எந்தவொரு கட்சிக்கும் அநீதியும் ஏற்படாது.-என்றார். (அ)

## வவுனியா...

விழா நிகழ்வு நேற்று கோலகலமாக ஆரம்பமாகியது.

இதன்போது பல்வேறு விடயங்களை மையப்படுத்திய கண்காட்சிக் கூடங்க ளும் திறந்து வைக்கப்பட்டன. இந்நிலை யில் வவுனியா வடக்கு நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் காட்சிப்படுத்தப்பட்டதுடன், புதூர் நாகதம்பிரான் கோவிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (அ)

## தமிழ்க் கட்சிக...

ஆதரவை ஒருமித்து வழங்க வேண்டும். அவ்வாறு சகலரது ஒத்துழைப்புடனும் ஆதரவுடனும் ஆட்சி அமைக்கப்படுகிற போது எந்தவித பாகுபாடுகளுமின்றி ஆட்சி அமையப்பெறும்.

இதனூடாக நீண்ட காலமாக இருந்து வருகின்ற பிரிவினை அரசியலுக்கு முடிவு காட்டி இன, மத பேதமில்லாத ஒன்றி ணைந்த அரசியலை மேற்கொள்ள எம்மு டன் அனைவரும் வாருங்கள்.

எனவே, அனைவரும் சம உரிமைகளு டன் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் வாழக் கூடியதான ஆட்சி அமையப் பெறு வதற்கு எமக்கான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குங்கள் என இங்கு வைத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர் களிடம் கோருகின்றோம்- என்றார். (அ)

## தாக்குதலுக்கு...

தாக்குதலை நடத்த முயன்றவேளை ஊரில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு குறித்த கும்பலை மடக்கிப் பிடித்து ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் ஊர்காவற்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## இந்திய...

விடுதலை செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைப்பற்றப் பட்ட மூன்று படகுகளில் ஒரு படகை செலுத்திவந்த படகோட்டிக்கு 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப பட்டுள்ளது.

ஒரு படகுக்கான உரிமை கோரல் வழக்கு ஜூன் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஏனைய இரண்டு படகுகளில் ஒரு படகின் உரிமையாளர் படகில் இருந்த மையாலும், மற்றைய படகின் உரிமை யாளரின் மகன் அந்த படகில் இருந்த துடன், அவர் தந்தையின் மருத்துவ சான்றிதழை சமர்ப்பித்து குற்றத்தை ஒப்புக்கொண்டமையாலும் அந்த இரு படகுகளையும் அரசுடைமையாக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

## இந்து மக்களின்...

கிறித்தவர்கள் மறுபுறம்.

இந்த மூன்று மதத்தினரிடையே உள்ள தீவிரர்கள் இந்து மதத்தின் இருப்பையே அச்சுறுத்துகின்றனர்.

புத்த தீவிரர்களும், முகமதிய தீவிரர் களும் கிறித்தவ தீவிரர்களும் இலங்கை யில் தங்கள் இருப்பை உறுதி செய்வதற் காக இந்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கக் கடுமையாக முயல்கின்றனர்.

சுதந்திரத்திற்கு முந்தைய கிறித்தவ அதிகாரத்தைப் போலவே சுதந்திரத்திற் குப் பிந்தைய அரசியல் அதிகாரத்தைப் புத்தர் அநுபவிக்கின்றனர். முகமதியர் களுக்கான அரசியல் அதிகாரம் அவர் களின் ஒத்திசைவான இசுலாமிய அடை யாளம் மற்றும் எண்ணெய் வளம் நிறைந்த இஸ்லாமிய நாடுகளின் ஆதரவி லிருந்து உருவாகிறது. கிறித்தவர்களின் அரசியல் அதிகாரம் வழிபாட்டு மேடை யிலிருந்து வழிநடத்த உலகெங்கும் நிதியு தவி பெறும் மதகுருமாருக்கே உள்ளது.

இந்துக்களுக்கு அரசியல் அதிகாரமே இல்லை.

இந்துக்களின் அரசியல் வலிமையைச் சேர்க்க, இலங்கையின் அனைத்து இந்துக் களும் அனைத்து தேர்தல்களிலும் ஓர் இந்து வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும்.

ஒரே நேரத்தில் அல்லது தொடர்ச்சி யாக மூன்று தேர்தல்கள் வர இருக்கின் றன. இம்மூன்று தேர்தல்களிலும் வேறுன் றிய இந்துப் பின்னணியைக் கொண்ட வேட்பாளர்களுக்கே இலங்கை இந்துக் களின் எழுச்சிக் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

இலங்கைக் குடியரசுத் தலைவர் தேர் தலில் ஒரு பொது இந்து வேட்பாளர் போட்டியிட்டால், மலையகம், மேற்கு, தெற்கு, கிழக்கு, வடக்கு என இலங்கை யின் அனைத்துத் திசைகளிலிருந்தும் 20 இலட்சம் இந்து வாக்காளர்கள் அவருக்கு வாக்களிப்பார்கள்.

இந்துக்கள் மனோ கணேசனைப் பொது வேட்பாளராகத் தேர்ந்தெடுத்து அவருக்கு ஒருமித்து வாக்களிக்க வேண்டும் -என்றுள்ளது. (அ)

## சஜித் தரப்பின்...

கைச்சாத்திடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.மரிக்கார் தெரி வித்தார்

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மரிக்கார் இத னைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்-

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை எதிர்நோக்குவதற்காக முன் னெடுக்கப்படும் அடுத்த கட்ட நடவடிக் கையாகவே புதிய கூட்டணி உருவாக் கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி இன்று கைச்சாத் திடவுள்ளது. ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட குழுவினர் இந்தப் புதிய அரசியல் கூட்ட ணியில் இணைவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்து மாத்திரம் நாம் கூட்டணி அமைக்கவில்லை. கொள்கை திட்டங் களின் அடிப்படையிலும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள நிலையிலேயே கூட்டணியில் இணைவுள்ளோம்- என்றார். (அ)

## பகலில் நடு...

பிரச்னை ஒன்றின் விளைவாக, இரண்டு தரப்புகளுக்கு இடையில், பாடசாலை வளாகத்தில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அதனையடுத்து, பாடசாலை நிர்வா கம், இரு தரப்புகளையும் சமரசம் செய்து பாடசாலை வளாகத்தை விட்டு வெளியே அனுப்பியது.

அதன் பின்னர், மீளவும் குறித்த இரண்டு தரப்பினரும், புன்னைநீராவி பிள்ளையார் ஆலய சந்தி பகுதியில் மீளவும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் பிரதேச மக்களால், ஏற்கனவே பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்திற்கு சென்ற தருமபுரம் பொலி ஸார் இருவரை கைது செய்து பின்னர் அவர்களை மீளவும் இறக்கிவிட்டு, சிறிது தூரம் சென்ற பின்னர் கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்கான நபர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது வழியிலேயே உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்கு தருமபுரம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸாரை அழைத்திருந்தபோதும் பாடசாலைக்கு பொலிஸார் சமுகம் அளித்திருக்கவில்லை என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில், 32 வயதான சவரிமுத்து ஜோன் பற்றிக் என்பவரே உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் ஒருவரை தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.(அ)

ஈழநாடு
Eelanadu

# கச்சதீவை இந்தியாவுக்கு வழங்குவது சாத்தியமற்றது!

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 05

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற கச்சதீவை மீண்டும் இந்தியாவுக்கு வழங்குவது என்பது சாத்தியமற்ற விடயம் எனக் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**




யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கச்சதீவினை இந்தியாவுக்கு வழங்குவது என்பது சாத்தியமற்ற விடயமாகும். அவ்வாறு வழங்குவதாக இருந்தால் இலங்கையின் கடல் வளங்கள் முற்று முழுதாகச் சூறையாடப்படும் நிலை ஏற்படும்.

எமது நாட்டில் கடந்த 17 ஆம் ஆண்டு இழுவைமடிப் படகு பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்திய மீனவர்கள் இழுவைமடிப் படகினைப் பயன்படுத்தி இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோத மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக இலங்கையின் கடல் வளம் அழிக்கப்படுவதோடு, இலங்கை மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களும் சேதப்படுத்தப்ப டுகின்றன. இதன் காரணமாக நமது மீனவர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்-என்றார். (அ)

# பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்று அழைப்பாணை!



கொழும்பு, ஏப். 05

தலைமை பொலிஸ் பரிசோதகர் சிலருக்கு இடமாற்றம் வழங்கியமை தொடர்பில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சில அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உயர் நீதிமன்றம் அறிவுறித்தியுள்ளது.

குறித்த மனுக்கள் நேற்று அழைக்கப்பட்டிருந்த போது, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சித்திரை புதுவருட காலத்தில் நாடு முழுவதிலும் பாதுகாப்பு!

கொழும்பு, ஏப். 05

எதிர்வரும் சித்திரை புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய சேவைகள் மற்றும் அரச சேவைகளை தடையின்றி பேணுவதற்காக முறையான வேலைத்திட்டத்தை உருவாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சுகள் போன்ற அத்தியாவசிய வகைகளின் கீழ் வரும் நிறுவனங்கள் கூட்டாக இந்த வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் எதிர்வரும் சித்திரை புத்தாண்டு காலப் பகுதியில், நாடு முழுவதும் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதை உறுதிப்படுத்தும் வகையிலும் விரிவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி பாதுகாப்பு தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# கிழக்கு கல்விசாரா ஊழியர் இடமாற்றம் இரத்து

மட்டக்களப்பு, ஏப். 05

கிழக்கு மாகாண பாடசாலைகளில் காணப்படும் கல்வி சாரா ஊழியர்களின் வருடாந்த இடமாற்றம் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்பின் நேரடி தலையீட்டை தொடர்ந்து, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தேசியப் பாடசாலைகளின் ஆளணி விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் தலையீடு மற்றும் முறையான பதிலீடுகள் எதுவும் இன்றியும் இடம்பெற்ற இடமாற்றம் குறித்து கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் நேரடி கவனத்துக்கு கொண்டுவரும் வகையில் கடந்த முதலாம் திகதி நேரடியாக கல்வி அமைச்சுக்கு விஜயம் செய்து இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்பின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதன் விளைவாகவே மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் மேற்படி இடமாற்றம் இரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்ற உறுப்பினர் நந்தசேன காலமானார்



கொழும்பு, ஏப். 05

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கே.எச்.நந்தசேன திடீர் சுகவீனம் காரணமாக நேற்றுக் காலை காலமானார்.

69 ஆவது வயதான அவர் சுகயீனம் காரணமாக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கே. எச். நந்தசேனவின் வெற்றிடத்துக்கு எம். ஜி. வீரசேன நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வரலாற்று வெற்றியை பெறுவார்!

## கூறுகிறார் வஜிர அபேவர்த்தன



கொழும்பு, ஏப். 05

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி வரலாற்று வெற்றியை பதிவு செய்வார்" என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனியொருவராக இந்த நாட்டை பொறுப்பேற்று இந்த நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளார்.

ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை மக்கள் நன்கு அறிந்துள்ளனர். எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி வரலாற்று வெற்றியை பெறுவார். ஆளும்தரப்பினரின் விமர்சனம் அர்த்தமற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை தேர்தலில் முன்னிலையாக போவதில்லை. தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு பல அரசியில் கட்சிகள் விருப்பம் தெரிவித்துள்ளன. நாம் அதனை விரைவில் அறிவிப்போம்-என்றார். (அ)

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் கிழக்குப் பல்கலை மாணவர்களும் போராட்டம்




அம்பாறை, ஏப். 05

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் அத்துமீறி பறிக்கப்படுவதற்கும் அநீதிகள் இழைக்கப்படுவதற்கும் எதிர்ப்பு தெரிவித்து மக்கள் நீதிகோரிய போராட்டம் 11 ஆவது நாளாக நேற்று இடம்பெற்றது.

இங்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நற்பிட்டிமுனை அம்பலத்தடி பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து பொதுமக்களுடன் இணைந்து நடைபவனியாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் முன்னால் உள்ள போராட்ட இடத்தை வந்தடைந்தனர்.

இதன்போது அமைச்சரவைத் தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள், கல்முனை உப பிரதேச அலுவலகமாக கருதி மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத தீர்மானங்கள் அனைத்தையும் இரத்து செய்யுங்கள், காணி நிதி அதிகாரங்களை வழங்குங்கள், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சுயாதீன தொழிற்பாட்டை உறுதிப்படுத்துங்கள் என பல்வேறு கோஷங்களை முன்வைத்து போராடினர்.

இப்போராட்டத்திற்கு ஆதரவாக பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், செல்வராஜா கஜேந்திரன் உட்பட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# 3ஆவது வெற்றியை பதிந்தது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்!



விசாகப்பட்டினம், ஏப். 05

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 16ஆவது லீக் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 106 ஓட்டங்களில் வீழ்த்தியுள்ளது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி. இதன் மூலம் நடப்பு தொடரில் மூன்று போட்டிகளில் விளையாடி மூன்றிலும் அந்த அணி வெற்றியை பதிவு செய்துள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 272 ஓட்டங்கள் எடுத்தது. 273 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை டில்லி அணி விரட்டியது. டில்லி அதிரடி தொடக்கம் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால், முதல் 5 ஓவர்களில் பிரித்வி ஷா, மிட்செல் மார்ஷ், அபிஷேக் போரல், டேவிட் வோர்ணர் ஆகியோர் ஆட்டமிழந்தனர். இதில் மார்ஷ் மற்றும் போரல் ஓட்டம் ஏதும் எடுக்காமல் வெளியேறினர். அதன் பிறகு அணித்தலைவர் ரிஷப் பந்த் மற்றும் ட்ரிஸ்டியன் ஸ்டப்ஸ் இணைந்து 93 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர்.

25 பந்துகளில் 55 ஓட்டங்கள் விளாசிய பந்த், வருண் சக்கரவர்த்தி சுழலில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் அக்சர் படேலை வெளியேற்றினார் வருண். ஸ்டப்ஸ், 54 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந்த டில்லி அணி, 17.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 166 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அதன் மூலம் கொல்கத்தா வெற்றி பெற்றது.

கொல்கத்தா அணிக்காக வைபவ் அரோரா மற்றும் வருண் ஆகியோர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றி இருந்தார். ஸ்டார்க் 2, ரஸல் மற்றும் நரைன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருதை சுனில் நரைன் வென்றார்.

முன்னதாக, முதல் இன்னிங்ஸில் கொல்கத்தா அணிக்காக சுனில் நரைன் - பில் சால்ட் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். சுனில் நரைன் சிறப்பான தொடக்கத்தை கொடுக்க, 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் பில். அடுத்து வந்த அங்கிரிஷ் ரகுவன்ஷி - சுனில் நரைனுடன் இணைந்து விளாச 10 ஓவர் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்களைச் சேர்த்தது கொல்கத்தா. ஐ. பி. எல். தொடரில் 10 ஓவரில் எடுக்கப்பட்ட 3ஆவது அதிகபட்ச ஓட்டம் இது.

7 சிக்ஸர்களை விளாசி 85 ஓட்டங்களை குவித்த சுனில் நரைனை 13ஆவது ஓவரில் மிட்செல் மார்ஷ் விக்கெட்டாக்கினார். அவரைத் தொடர்ந்து 54 ஓட்டங்களில் அங்கிரிஷ் ரகுவன்ஷியும் வெளியேறினார். 15 ஓவர் முடிவில் 3 விக்கெட்களை இழந்த கொல்கத்தா 195 ஓட்டங்களைப் பெற்றது.

ரஸல் - ஸ்ரேயாஸ் ஐயர் இணைப்பாட்டம் அமைக்க, ரஸல் அதிரடியாக ஆடி ஓட்டங்களை சேர்த்தார். ஸ்ரேயாஸ் தன் பங்குக்கு 2 சிக்ஸர்களை விளாசினார். ஆனால் 18 ஓட்டங்களில் அவரை வெளியேற்றினார் கலீல் அகமது.

ரிங்கு சிங் வந்த வேகத்தில் 3 சிக்ஸர்களை விளாசி 28 ஓட்டங்களுடன் நடையைக்கட்டினார். அடுத்த ஓவரில் ரஸல் 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதே ஓவரில் ரமன்தீப் சிங் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடக்கத்தில் சிறப்பாக விளையாடி வந்த கொல்கத்தா இறுதிக்கட்டத்தில் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 272 ஓட்டங்களை சேர்த்தது.

# ஹார்திக்கிடம் இருந்து தலைமை பறிக்கப்படும் முன்னாள் மும்பை வீரர்

மும்பை, ஏப். 05

ரோஹித் சர்மாவை தலைமைபதவியில் இருந்து நீக்கியதை மும்பை இந்தியன்ஸ் அணியின் ரசிகர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் மும்பை இந்தியன்ஸ் விளையாடும் மைதானங்களில் ஹார்திக் பாண்ட்யாவுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணி தனது முதல் மூன்று போட்டிகளிலும் தோல்வி அடைந்துள்ளது.

இந்நிலையில் தோல்விகளாலும், ரசிகர்களின் எதிர்ப்பாலும் அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா அழுத்தத்தை சந்தித்துள்ளார் என இந்திய அணியின் முன்னாள் வீரர் மனோஜ் திவாரி கூறியுள்ளார்.

மேலும், ஹார்திக் பாண்ட்யா அழுத்தத்தில் இருக்கிறார் என்பது சில விசயங்கள் மூலம் தெரிகிறது. அவர் ரசிகர்களின் எதிர்ப்பால் அழுத்தத்தை உணர்கிறார். நான் பெரிய விசயம் ஒன்றை சொல்லப் போகிறேன். இந்த ஆறு நாள் இடைவெளியில் ஹார்திக் பாண்ட்யாவிடம் இருந்து தலைமைப் பதவியை பறித்து ரோஹித் சர்மாவை தலைவராக்க வாய்ப்பு உள்ளது.

இந்த மாற்றம் நடக்க வாய்ப்புள்ளது. இந்த ஐபிஎல் அணிகளின் உரிமையாளர்கள் குறித்து எனக்கு தெரிந்த வரை அவர்கள் இது போன்ற முடிவுகளை எடுக்க தயங்க மாட்டார்கள். அவர்கள்தான் ரோகித் சர்மாவின் தலைமை பதவியை பறித்து இந்த சிக்கலை தொடங்கி வைத்தார்கள் - என்றார். (ஐ)



# டில்லி அணிக்கு அபராதம்

விசாகப்பட்டினம், ஏப். 05

கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் தாமதமாக பந்துவீசியதற்காக டில்லி அணியினருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தா - டில்லி அணிகள் மோதிய போட்டி யில் கொல்கத்தா அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றிருந்தது.

இந்தப் போட்டி முடிந்த பிறகு டில்லி அணித் தலைவர் ரிஷப் பந்துக்கும் டில்லி அணி வீரர்களுக்கும் ஐ. பி. எல் நிர்வாகம் அபராதம் விதித்திருக்கிறது.

தாமதமாக பந்துவீசியமைக்காகவே இந்த அபராதம்



விதிக்கப்பட்டுள்ளது. கடந்த போட்டியிலும் தாமதம் காரணமாக ரிஷப் பந்துக்கு 12 இலட்சம் இந்திய ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இது இரண்டாவது தாமதம் என்பதால் அவருக்கு 24 இலட்சம் இந்திய ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், மற்ற வீரர்களுக்கு 6 இலட்சம் ரூபாய் அல்லது அவர்களின் போட்டி ஊதியத்திலிருந்து 25சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

ரிஷப் பந்த் மீண்டும் இந்தத் தவறை இழைத்தால் அவருக்கு 30 இலட்சம் இந்திய ரூபாயும் ஒரு போட்டி யில் ஆட தடையும் விதிக்கப்படும். ஏனைய வீரர்களுக்கு 12 இலட்சம் இந்திய ரூபாய் அல்லது போட்டி ஊதியத்தில் 50 வீதம் - இதில் எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகை அபராதமாக விதிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ

# மீண்டும் வருகின்றது சம்பியன்ஸ் லீக் தொடர்!




மும்பை, ஏப். 05

சம்பியன்ஸ் லீக் இருபது - 20 கிரிக்கெட் தொடர் கடந்த 2009-10 முதல் 2014-15ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்டது. இதில் இந்தியாவில் இருந்து 3 அணிகள், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்காவில் இருந்து தலா 2 அணிகள் மற்றும் பாகிஸ்தான், மேற்கு இந்தியத் தீவுகள், நியூஸிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒரு அணிகள் என மொத்தம் 10 அணிகள் பங்கேற்று விளையாடின.

கடைசியாக சம்பியன்ஸ் லீக் இருபது - 20 தொடர் 2014ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இந்நிலையில், இந்தத் தொடரை மீண்டும் நடத்துவது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, கிரிக்கெட் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து கிரிக்கெட் சபை என்பன ஆலோசனை நடத்தியுள்ளன. இதை அவுஸ்திரேலியாவில் உள்ள விக்ரோறியா கிரிக்கெட் சங்கத்தின் தலைமைச் செயல் அதிகாரி நிக் கம்மின்ஸ் உறுதி செய்துள்ளார். (ஐ)

# ஐ. பி. எல். தொடரிலிருந்து ஷிவம் மாவி விலகினார்!

லக்னோ, ஏப். 05

ஐ. பி. எல். ரி- 20 கிரிக்கெட் தொடரில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷிவம் மாவி விலா எலும்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக தொடரில் இருந்து முழுமையாக விலகி உள்ளார்.

உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதான ஷிவம் மாவி கடைசியாக 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி இருந்தார். ஐ. பி. எல். தொடரில் கடந்த தொடரில் குஜராத் அணியில் இடம்பெற்றிருந்த அவர் ஓர் ஆட்டத்தில் கூட களமிறக்கப்படவில்லை. இந்தத் தொடருக்கு ஷிவம் மாவியை 6.40 கோடி (இந்திய) ரூபாய்க்கு வாங்கியிருந்தது லக்னோ அணி. (ஐ)



முனைவர் ச.சீனிவாசன்

# புலப்பெயர்வு: கற்காலம் முதல் தற்காலம் வரை

**புலப்பெயர்வு : வரையறையும் வரலாறும்**

இடம்பெயர்தல், புலம்பெயர்தல் ஆகிய சொற்கள் ஒரே பொருளையே கொண்டுள்ளன. இதனை ஆங்கிலத்தில் **'Diaspora'** என்று அழைக்கப்படுகிறது. இது, **'Diaspeirein'** என்ற கிரேக்கச் சொல்லினைக் கொண்டு உருவானதாகும். **Diaspeirein** என்னும் சொல் 'சிதறுதல்' அல்லது 'பரவுதல்' என்னும் பொருளைக் குறித்து நிற்பதாக உள்ளது. வரலாற்று ரீதியாக 'கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இஸ்ரவேலிலிருந்து பாபிலோனுக்கு வெளியேற்றப்பட்ட யூதர்களைக் குறிப்பதற்காக னுயைளிழசய என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது'. (வ. ந.கிரிதரன். 2019: 9-13)

பண்டைக் காலத்தில் பல்வேறு சூழல் காரணமாக ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு மக்கள் இடம் பெயர்ந்தனர். இந்நிகழ்வு புலம் பெயர்தல் என்ற பொதுப் பெயரால் குறிக்கப்பட்டது. சாதாரண அல்லது தவிர்க்கமுடியாத சூழலில் மனிதன் தனியாகவோ, குடும்பத்துடனோ, சிறுசிறு குழுக்களாகவோ தம் இருப்பிடத்தை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு மாற்றுவது இடப் பெயர்ச்சி அல்லது இடப்பெயர்வு ஆகும். இடம் பெயர்தல்ஈ குடி பெயர்தல், புலம் பெயர்தல் என்று இதனை முறைப்படுத்தலாம். 'புலப்பெயர்வு என்பது ஒரே அரசியல் பூகோள எல்லையை விட்டுப் பெயர்ந்து சமூக அரசியல் பண்பாட்டுச் சூழ்நிலைகளால் முற்றிலும் வேறுபட்ட பிரதேசத்தில் வாழ நேரிடுபவர்களைக்' குறிக்கிறது. (சு. குணேஸ்வரன். 2009)

புலம்பெயர்தல் என்பது மனித சமூகத்திற்கு மட்டுமே உரியது அல்ல. மாறாக, விலங்கினம், தாவரங்கள், மற்றும் பறவைகள் ஆகியனவற்றிற்கு இடப் பெயர்ச்சி வாழ்க்கை என்பது பொது நியதியாகும். அவை தங்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவும் இருப்பின் ஆதாரத்தை நிலைநாட்டவும் புலம்பெயர்ந்திருப்பதைக் காணமுடிகிறது. மனிதர்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் புலம்பெயர்தலைப் பழந்தமிழில் 'வலசை' என்று குறிக்கும் வழக்கம் இருந்துள்ளது. இப்போதெல்லாம், 'வலசை' என்ற சொல் பெரும்பாலும் பறவைகளின் இடப் பெயர்ச்சி தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பறவைகள் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட பருவ காலத்தில் தட்பவெப்பம், உணவு, இனப்பெருக்கம் முதலான காரணங்களுக்காக இடம் பெயர்வதை 'வலசை போதல்' என்று



குறிப்பிடப்படுகிறது. ஆக, விலங்கினமும், மனித இனமும் என்று தோன்றியதோ அன்றிலிருந்து புலம்பெயர்தல் நடந்து கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

'உடல் ரீதியிலான பருவ மாற்றங்கள், காலநிலை மாற்றங்கள், இனவிருத்தித் தேவைகள் எனப் பல்வேறு காரணங்களுக்காகப் பறவைகள், மிருகங்களெல்லாம் தாம் பிறந்த இடத்திலிருந்து புலம் பெயர்ந்து வருவதெல்லாம் அவற்றின் தப்பிப் பிழைத்தலுக்குரிய தேவைகளின் காரணமாகத்தான்' எனக் கருதுகிறார். (வ. ந. கிரிதரன். 2013 : 1) 'இன்றைய யுகத்தில் புலம்பெயர்தல் என்பது உயிரைத் தக்க வைப்பதற்கான இடப்பெயர்வாகவே உள்ளது' என்ற மதிவதனியின் கருத்தும் இவ்விடத்தில் ஒப்புநோக்கத் தக்கது. புலப்பெயர்தலுக்கும் மனிதனுக்கும் இயல்பிலேயே நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதையும், புலப்பெயர்வு என்பது மனித சமுதாய முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருந்து வந்திருக்கிறது என்பதையும் அறிய முடிகிறது. மனித இனம் தோன்றியது முதல் இந்தத் தொடர்பு நீண்ட காலமாக இருந்துவரும் ஒரு நிகழ்வாகும்.



**புலப்பெயர்வு : கற்காலம் முதல் தற்காலம் வரை**

ஆதிகாலத்தில் அவ்வப்போது நாடோடிகளாகப் புலம்பெயர்ந்த மானிட இனம் பின்னர் உணவுத் தேவைக்காக அடிக்கடி புலம்பெயர வேண்டிய சூழல் ஏற்பட்டது. காலப்போக்கில், சமூக, பொருளாதார, அரசியல் சூழல்கள் மானுட இனத்தின் புலப்பெயர்தலை மேலும் விரிவாக்கியது. மக்களின் குடியேற்றம் மற்றும் புலப்பெயர்வு வரலாற்றைக் கற்காலம், வரலாற்றுக் காலம், சங்ககாலம், பிற்காலச் சோழர் காலம், காலனிய ஆட்சிக்காலம் மற்றும் விடுதலைக்குப் பிந்தைய காலம் எனப் பல கட்டங்களில் வகைப்படுத்தி விளக்கலாம்.

**கற்காலமும் புலப்பெயர்வும்**

கற்காலம் அல்லது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது, எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் எதுவும் இல்லாத காலத்தைக் குறிப்பதாகும். கருவிகளைச் செய்வதற்காகக் கற்கள் பயன்படுத்தப்பட்ட வரலாற்றுக்கு முந்திய காலமாகக் கற்காலம் கருதப்படுகிறது. இக்காலத்தைப், பழைய கற்காலம் (கி.மு. 1000 ஆண்டுகள்), புதிய கற்காலம் (கி.மு. 10000-கி.மு. 4000), செம்புக் கற்காலம் (கி.மு. 3000 - கி.மு. 1500), இரும்புக் காலம் (கி.மு. 1500- கி. மு. 600) என நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். இக்காலத்தில் வாழ்ந்தவர்களைப் பற்றிப் படிமங்கள், புதைபொருட்கள், எலும்புகள் ஆகியவற்றின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

வரலாற்றுக்கு முந்தைய கற்காலத்தில் பெருமளவில் புலப்பெயர்வுகள் ஏற்பட்டதற்கான ஆதாரங்களை அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பு, பிரிட்டனில் உள்ள இன்றைய மக்களின் மரபணு அமைப்பை விளக்க உதவுகிறது. இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் பிற்கால மக்கள் தொகையின் பாதி வம்சாவழியினார் இப்படிக் குடியேறியவர்களிடமிருந்து வந்தவர்கள். இந்த மாபெரும் புலப்பெயர்வு கி.மு. 1400 முதல் கி.மு. 870 க்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. ஐரோப்பாவில் கிடைத்த சில எலும்புக் கூடுகளின் னுயே-வை ஆராய்ந்ததில் பிரிட்டன் மக்களின் மரபணுவை மாற்றிய புலப்பெயர்வு உண்மைகள் வெளிவந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார் பால் ரிங்கன். (BBC News Internet, 25.12.2021)

**வரலாற்றுக் காலமும் புலப்பெயர்வும்**

மனிதர்கள் வாழ்ந்ததற்கான எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள் கிடைக்கின்ற காலத்தையே வரலாற்றுக் காலம் என வழங்கப்படுகிறது. வரலாற்றுக் காலந்தோட்டே மானுடப் புலப்பெயர்வு என்பது நடைமுறையில் இருந்திருக்கிறது. பாலஸ்தீனிய யூதர்கள் பாபிலோனியாவிற்கு நாடுகடத்தப்பட்ட நிகழ்வு மேற்குலகில் நிகழ்ந்த முதல் புலப்பெயர்வாகக் கருதப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டில் தொடங்கி தொடர்ந்து ஏராளமான ஆப்பிரிக்க இனத்தினர் ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கப்பட்டு நாடு கடத்தபட்ட நிகழ்வும் புலப்பெயர்வாகவே கொள்ளப்படுகிறது. கிறிஸ்து காலத்திற்கு முன்பிருந்தே மேற்கு நாட்டவர்க்கும் தமிழகத்திற்கும் வாணிபத் தொடர்பு இருந்ததை எகிப்தில் தமிழி எழுத்திலான வாணிப ஒப்பந்தப் பட்டயம் ஒன்று தெரிவிக்கின்றது. வணிக நோக்கில் புலம்பெய்ர்ந்த தமிழர்கள் முக்கியமான நகரங்களில் நிலைபெற்று, அங்கு தம்மொழியையும் பண்பாட்டையும் பரப்பினர்.

**சங்க காலமும் புலப்பெயர்வும்**

'புலம்பெயர்' என்ற சொல் மட்டுமல்லாது புலம்பெயர்ந்த நிலைகள் மற்றும் நிகழ்வுகள் குறித்த குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. 'மொழிபெயர்தேயம்', 'வேறுபுலம்', 'அறியாத்தேயம்' முதலான சொற்கள் இதற்குச் சான்றுகளாகும்.

'புலம்பெயர் புலம்பொடு கலங்கி'
(நெடுநல்வாடை: 5),

'புலம்பெயர் புதுவீர்'
(மலைபடுகடாம்: 350)

ஆகிய சங்க இலக்கிய வரிகளில் 'புலம்பெயர்' என்ற பதம் பயின்று வருகிறது.

தமிழ்ச் சூழலில், வேற்று நாட்டவர் வணிகம், பொருள் தேடல் நிமித்தமாகத் தமிழ் மண்ணிற்குப் புலம்பெயர்ந்தோரை 'புலம்பெயர் மாக்கள்' என்ற பதம் குறித்து நிற்கிறது. புகார் நகர மக்களோடு புலம் பெயர்ந்த மாக்கள் கலந்து இனிதிருந்த காட்சியை,

"புலம்பெயர் மாக்கள் கலந்து இனி
துறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்
பெறினும்" (பட்டினப்பாலை, 217-218 )

பட்டினப்பாலை வர்ணிக்கிறது.

'கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்
கள்' (சிலப்பதிகாரம்- 6:130)

'பரந்தொருங் கீண்டிய பாதை மாக்
கள்' (மணிமேகலை -1:16)

என்று தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்து வந்தவர்களை மனிதத் தன்மையிலிருந்து குறைந்த 'மாக்கள்' என்ற பொருளில் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. மேற்கு ஆசியாவிலிருந்து வியாபாரத்தின் பொருட்டு தமிழகம் ஏகியோரை யவனர், சோனகர் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகொன்றது.

வணிகத்தின் நிமித்தம் கிரேக்க, உரோம நாடுகளுக்குத் தமிழர்கள் புலம் பெயர்ந்த நிகழ்வை சங்க இலக்கியங்கள்

# புலப்பெயர்வு:...

பதிவு செய்கின்றன. 'சாதுவன்' போன்ற வணிகர்கள் பலர் வேற்று நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்த சான்றுகள் காணக்கிடைக்கின்றன. தமிழ் மரபில் போர், கல்வி, பொருள் தேடல் ஆகிய மூன்றின் நிமித்தம் ஆண்கள் புலம்பெயர்ந்ததாக இலக்கியங்கள் சுட்டுகின்றன. பொருள்தேடப் புலம்பெயர்ந்த தலைவன் குறித்துச் சங்க இலக்கியங்கள் தெளிவாகப் பதிவு செய்திருக்கின்றன. பொருள் தேடும் பொருட்டுப் புலம்பெயராமல் ஓரிடத்தில் தேங்கி நிற்றலைச் சங்ககாலச் சமுதாயம் அங்கீகரிக்கவில்லை எனத் தெரிகிறது. கண்ணகியுடன் கோவலன் மதுரைக்குப் புலம்பெயர்ந்து ஏகிய வரலாற்றைச் சிலப்பதிகாரம் விளக்கி நிற்கிறது. தருமதத்தன் பழிக்கு அஞ்சி பெற்றோருடன் புகாரை விட்டு மதுரைக்குப் புலம்பெயர்ந்த நிகழ்வை மணிமேகலை விவரிக்கின்றது. தமிழ்ச் சமூக வரலாற்றில் வணிகம் மற்றும் பொருள் தேடும் பொருட்டே புலப்பெயர்வு நிகழ்ந்துள்ளதாகக் கணிக்கலாம்.



**பிற்காலச் சோழர் காலமும் புலப்பெயர்வும்**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு தொடங்கி பதினோராம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைப் பிற்காலச் சோழர் காலம் எனக் கொள்ளலாம். இக்காலத்தில் இலங்கை, மலேசியா, தாய்லாந்து முதலான தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ் மன்னர்களின் ஆட்சி நிலவிவந்தது. பேரா நதி, பெர்ணம் நதி, முவார் நதி முதலான நதிக்கரைகளில் தமிழர் ஆட்சி நடந்ததாக மலேசியத் தமிழர் வரலாறு குறிப்பிடுகின்றது. அந்தமான்- நிகோபார் , இந்தோனேசியா, ஜாவா , வட மலேயா ஆகிய பகுதிகளிலும் சோழர்கள் தமது ஆட்சியை நீட்டித்தனர். ஆக, மன்னர்களின் படையெடுப்பின்போது நிகழ்ந்த இப்புலப்பெயர்வு முற்றிலும் அரசியல் சார்ந்ததாகும்.

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வணிகத்தின் காரணமாகத் தென்னிந்தியாவில் அடிக்கடி மக்களின் புலப்பெயர்வு நிகழ்ந்துள்ளது. இத்தகைய புலப்பெயர்வு பல கலப்பினங்கள் உருவாக இடமளித்தது. தென்னிந்தியாவில் கேரளத்தின் கொச்சி, திருவாங்கூர் போன்ற பகுதிகளில் யூத இனக்கலப்பு உருவானது. மலபார் பகுதியில் அரபிய வணிகர்களின் புலப்பெயர்வினால் ஏற்பட்ட இனக்கலப்பு அங்கு மாற்று சமூக, அரசியல் சூழ்நிலைகளை ஏற்படுத்தியது. வணிகத்தின் பொருட்டு போர்ச்சுக்கீசியர்களின் இந்தியத் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதிப் பிரவேசம் மரக்காயர் என்ற புது இனம் உருவாகக் காரணமாக அமைந்தது.

**காலனிய காலமும் புலப்பெயர்வும்**

சோழர் ஆட்சிக் காலத்தில் ஆளும் அரசர்களாகக் குடியேறிய தமிழர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கூலித் தொழிலாளிகளாகப் புலம்பெயர்ந்து வாழும் அவலநிலை ஏற்பட்டது. பிரெஞ்சு, ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட காலனி நாடுகளிலும், கரிபியன் மற்றும் பிஜி தீவுகளிலும் தமிழர்கள் கூலிகளாகவும் அடிமைகளாகவும் அமர்த்தப்பட்டனர். ஆங்கில ஆட்சியாளர்களின் பொருளாதார நலனை முன்னிறுத்தி செயல்படுத்தப்பட்ட இந்த நடவடிக்கை தமிழர் வரலாற்றில் கறுப்புப் பக்கங்களாகும். எளிமையான கருவிகளைக் கொண்டு தங்கள் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து இயங்கிவந்த இந்திய விவசாயக் கிராமங்கள் காலனிய அரசின் நவீன நீர்ப்பாசன தொழில் நுட்பங்களால் சீர்குலைந்தன. விவசாயிகள் வீதிக்கு வரவும் புலம்பெயரவும் காலனித்துவ ஆட்சி காரணமாக அமைந்தது.

**விடுதலைக்குப் பிந்தைய தமிழர் புலப்பெயர்வு**

விடுதலைக்கு முந்தைய தமிழர் புலப்பெயர்வு வணிகம், படையெடுப்பு, போர், கூலி மற்றும் அடிமைத் தொழில் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. விடுதலைக்குப் பிந்தைய தமிழர் புலப்பெயர்வு என்பது இன்றைய நவீனத் தேவைகளுக்கேற்ப கல்வி, தொழில், நவீன வாழ்க்கை நாட்டம், வாழ்வாதார மேன்மை, உயர்ந்த வேலை வாய்ப்பு , புதுப்புது இடங்களைக் காணும் ஆர்வம் முதலானவைகளின் உந்துதலால் உலகின் பல்வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து நலம் பெற்று வாழ்வதைக் காண முடிகிறது.



பெருவாரியான பாண்டிச்சேரித் தமிழர்கள் தாய்மண்ணை விட்டுப் பெயர்ந்து பிரான்சில் குடியேறியதிலிருந்து விடுதலைக்குப் பிந்தய தமிழர் புலப்பெயர்வு ஆரம்பமாகிறது எனலாம். முதலில் பொருளாதார மேம்பாட்டிற்காக மலேசியா, சிங்கபூர் போன்ற அண்டை நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் பின்னர் போர்ப் பதற்றம், இனவெறி, படுகொலை போன்ற காரணங்களுக்காக சொந்த நாட்டை விட்டு விலகி உலகின் பல்வேறு தேசங்களுக்குப் புலம்பெயர நேரிட்டது. 'இன்றைய கணிப்பின்படி ஏறத்தாள பத்து லட்சத்திற்கும் அதிகமான ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்வதாகக் கணிக்கப்படுகிறது. இவர்களில் பெரும்பாலோர் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ், நோர்வே, இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து, வட அமெரிக்கா, கனடா மாற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் குடியேறியுள்ளனர்' என்று கூறுகிறார். எம். சேகர். 'தமிழர் புலப்பெயர்வு என்பது இன்று ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வையே குறிப்பிடுகின்றது' எனக் கருதுகிறார் பா. ஆனந்தகுமார். (2018 : 11).

**ஈழத்திலிருந்து மேற்குலகிற்குப் புலபெயர்ந்து சென்றவர்களை:**

போருக்கான அனுமானங்கள் உருவான ஆரம்ப காலகட்டத்திலேயே புலம்பெயர்ந்தவர்கள் எண்பதுகளில் ஏற்பட்ட தீவிர போர்ச் குழலில் உடமை, உறவுகளை இழந்து தன்னுயிரை மட்டுமாவது காத்துக் கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தத்தின் காரணமாகப் புகலிடம் தேடித் தஞ்சம் அடைந்தவர்கள்

2009-இல் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் போரையொட்டிப் புலம் பெயர்ந்தவர்கள் என மூன்று நிலைகளில் வகைப்படுத்தியுள்ளார் சு. செல்வக்குமரன்.

**புலம்பெயர்தலுக்கான காரணங்கள்**

"இடப் பெயர்ச்சி என்பது கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கும், ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கும் மக்கள் செல்வதாகும்' (பா. சிங்காரவேலன். 2006:10). சரித்திர காலத்தில் போர், வணிகம், இயற்கைச் சீற்றம் முதலானவை மக்கள் புலப்பெயர்வுக்குக் காரணங்களாக அமைந்தன. காலப்போக்கில் கடும் வறட்சி, விளைச்சல் நிலங்களைப் பாராமரிக்க இயலாமை, பொருள் தேடல், புதிய தொழில் தொடங்கும் வேட்கை, உயர்தர வாழ்க்கை நாட்டம், தரமான கல்வி பெறும் எண்ணம், வணிகம் செய்ய, வாழ்வாதாரத்தைப் பெருக்க, கடல்கோள்களில் இருந்து காப்பாற்றிக் கொள்ள, புதிய இடங்களை அறிந்து கொள்ள மற்றும் சமூக அரசியல் சூழல்கள் முதலானவை மனித இடப் பெயர்தலுக்கான முக்கிய காரணங்களாக அமைகின்றன. இவை தவிர, 'மன்னர்களின் வரி விதிப்பும் இடப் பெயர்ச்சிக்குத் தூண்டுதலாக இருந்ததைச் சோழர், பாண்டியர், விஜயநகர ஆட்சிக் காலத்தியக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன'. (ஆ. சிவசுப்பிரமணியன். 2006 : 17).

வரி விதிப்பிலிருந்து தப்பித்து அண்டை மாவட்டங்களுக்குப் புலம்பெயர்ந்த விவசாயிகள் கம்பெனி அரசால் தண்டிக்கப்பட்டனர். 'வளரும் நாடுகளைப் பொறுத்த வரையில் சமூகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக உள்நாட்டுக்குள் புலப் பெயர்வு அங்கீகரிக்கப்பட்ட முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது'. (S.Kunjamma, 2014 : 93). சுருங்கக் கூறின், பொருளாதார ஆதாரமின்மை, மழை பொய்த்துப் போதல், அரசியல் காரணங்கள், வேற்று நாட்டின் மீதான விருப்பு வெறுப்பு, இயற்கை சீற்றம் மற்றும் வளமின்மை ஆகியன புலம்பெயர்தலுக்கு அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. புலம்பெயர்தலுக்குப் பல்வேறு காரணிகள் கூறப்பட்டாலும் ஒட்டுமொத்தத்தில் 'இருத்தலுக்கான தப்பிப் பிழைத்தலே' முக்கியக் காரணியாகப் பலராலும் முன்வைக்கப்படுகிறது.

**புலம்பெயர்ந்தோர் : எதிர்மறைக் கருத்துக்கள்**

இடம் பெயரும் மக்கள், சொந்த மண்ணில் வாழ முடியாமல் தங்கள் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து, அந்நியமான மொழி மற்றும் நிலவியல் சூழலில் வாழ நேரிடுகிறது என்று ஒரு சாரார் கருதுகின்றனர். 'இடப் பெயர்ச்சி சமுதாய மாற்றத்திற்கு வழிகாட்டியாக அமைகின்றது' என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பாளர்கள், பொருளியல் அறிஞர்கள், சமுதாயச் சிந்தனையாளர்கள், மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தினர், அரசியல் ஞானிகள், சட்ட வல்லுனர்கள், திட்டக் குழுவினர் என இன்னொரு சாரார் மதிப்பிடுகின்றனர். (பா. சிங்காரவேலன், 2006. 1) எனினும், புலம்பெயர்ந்த மக்களை எல்லாம் கோழைகளென்றும், பயத்தினாலும், பொருள் தேடும் நோக்கினாலும் மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்களென்றும்' செங்கை ஆழியான் குறிப்பிடுகிறார். 'பிரச்னைகளுக்குப் பயந்து நாட்டை யும் வாழ்ந்த வீட்டையும் இனசனங்களையும் விட்டு பிரதேசம் ஓடும் காகக் கூட்டத்தைப் பற்றி நினைத்துத்தான் நான் அடிக்கடி பச்சாதாபப்படுவதுண்டு' என்ற முருகபூபதியின் கருத்தும் இவ்விடத்தில் எண்ணிப் பார்க்கத் தக்கது. புலம்பெயர்ந்தவர்களை மக்கள் என்னாமல் 'மாக்கள்' என விளிக்கிறது சங்க இலக்கியம்.